4 [Ap]proved by the Director of Publi[c] Instruction, Madras

# Mrichchhakati

BY

PANDIT NATESA SASTRI

# மிருச்சகடி

பண்டித நடேச சாஸ்திரியாரால்

இயற்றப்பட்டது

MADR...

O-, 2 MNS, M
N13
183854

Approved by the Director of Public Instruction, Madras

for use in recognised schools

# SANSKRIT TALES IN TAMIL

| | |
|---|---|
| **MRICHCHHAKATI** | **As. 4** |
| **MUDRARAKSHASAM** | **As. 4** |
| **VENISAMHARAM** | **As. 3** |

**These books are fit to be introduced as Readers in all Elementary and Secondary Schools.**

These books have long been out of print, and the publishers deserve the thanks of the Tamil people for having issued them in cheap editions. The first tale is based on the " Mrichchhakati " or " The Toy cart," a Sanskrit drama marked by originality and good sense. The principal characters are Charudatta, a Brahmin merchant who has lost all his property by excessive liberality and Vasantasena, a rich courtesan who loves the poor but noble Charudatta. The play abounds in comic situations besides containing many serious scenes, some of which border even on the tragic. The second tale is based on the Sanskrit drama "Mudrarakshasam," a play of political intrigue, full of life, action and sustained interest. The action of the peace takes place in the time of Chandragupta who founded a new dynasty at Pataliputra by deposing the last King of the Nanda line. Rakshasa, the Minister of the latter, refuses to recognise the usurper, endeavours to be avenged on him for the ruin of his late master. The plot turns on the efforts of the Brahmin Chanakya, the minister of Chandragupta, to win over the noble Rakshasa to his master's cause, in which he is ultimately successful. The third tale " Venisamharam" is an adaptation of an episode in the Mahabharata. Its action turns on the incident of Droupathi, the heroine of the epic, being dragged by the hair of her head into the royal assembly by one of the Kuru brothers. These three tales which have long been popular in India are all well told in the author's simple and chaste style. The printing and get up of the books reflect credit on the printers, the Guardian Press, Mount Road. The Pundit's untimely death is a serious loss to the cause of Tamil literature, and Tamil readers in Southern India will be glad to learn that steps are being taken to reprint some of his earlier works which have long been out of print.—*The Madras Mail.*

G. C. LOGANADHAM BROS.,
100, Mount Road, MADRAS.

# மிருச்சகடி

OFFICE OF THE REGISTRAR OF B...
7 FEB 1914
MADRAS.

ஸமஸ்கிருத நாடகத்திலிருந்து

பண்டித நடேச சாஸ்திரியாரால்

எழுதப்பட்டது

பாலக்காடு:

பி. ஏ. இராம அய்யர்

1913

PRINTED AT THE GUARDIAN PRESS,
MOUNT ROAD, MADRAS

ஆவணக் காப்பக
183854

OFFICE ... 1914 MADRAS

# முகவுரை

இந்த மிருச்சகடி என்ற நாடகமானது சூத்ரகர் என்ற மகாராஜாவாற் செய்யப்பட்ட கிரந்தம். இவர் மகத தேசத்தரசர். இவராண்ட காலம் அநேக ஆதாரங்களால் கி. பி. 200-ஆவது வருஷத்துக்குச் சரியான கலியுகம் 3,300-ஆவது வருஷமாகத் தெரியவருகிறது. ஸ்காந்தத்தில் குமாரிகா காண்டம் என்ற பிரசன்த்தில் சூத்ரகர் என்ற அரசர் மகதராச்சியத்தில் கலியுகம் 3,300 வருஷம் முதல் ஆளப்போவதாகக் கண்டிருக்கிறது. இன்னும் சரித்திரங்களுக்கு முக்கிய ஆதாரங்களான சாசனங்களாலும் சற்றேறக்குறைய இதே காலத்தில் இவ்வரசர் ஆண்டு வந்ததாகச் சொல்லலாம். இவைகளைக்கொண்டு இந்நாடகமானது இவரால் சுமார் 1,700 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டதாக நாம் சொல்லக்கூடும். இப்படி நாம் சொல்லுவதற்கு அனுகுணமாக நாணகம் என்ற ஒரு நாணயத்தின் பெயர் இந்தக் கிரந்தத்தில் வருகிறது. சகாரன் என்பவன் வசந்தசேனையை அழைக்கும்போது நாணகம் என்ற நாணயத்தைத் திருடுகிறவளே! என்று கூப்பிடுகிறான். இந்த நாணயம் வழங்கின காலமும் சற்றேறக்குறைய 1,700 வருஷங்களுக்கு முன்னென்று தெரியவருகிறது.

காதம்பரி முதலான கிரந்தங்களால் சூத்ரகர் மகாவித்துவான் என்று செம்மையாக ஏற்படுகிறது. அவரால் 1,700 வருஷங்களுக்கு முன் சகம் 122 வருஷ காலத்துக்குச் சரியாக இக்கிரந்தம் இயற்றப்பட்டது. இதனுடைய நடை தெளிவானது. இதில் இழிவான சூதாடி, திருடன், முடிச்சுமாரி முதற்கொண்டு உயர்ந்த நியாயாதிபதி, யோகிவரையில் வருவதை நாம் படிக்கப் படிக்கக் காணுவோம். மகாபாரதம், ராமாயணம் இவைகளைத்தவிர வேறு

கிரந்தங்களில் மிருச்சகடியிலடங்கிய அவ்வளவு வர்ணனைகளையும் காண்பதரிது.

இக்கதையின் நாயகன் சாருதத்தன் ; நாயகி வசந்தசேனை. இவ்விருவர்களுடைய நல்ல சரிதந்தான் இந்நாடகத்தின் முக்கிய கதை. இதை நாம் படிப்பதில் கெட்ட குணங்கள் சிலகாலஞ் செம்மையாய் நிலைபெற்றிருந்து பிறகு நாசமடைகிறதையும், நியாயமென்பது எப்பொழுதும் நிலைநிற்பதையும் காண்போம். நமது ஜம்புத்வீபம் பழைய காலத்தில் அடைந்திருந்த நாகரிகத்தை இந்நாடகத்தைக்கொண்டு நாம் நன்றாய்க் காணலாம். நமது நாட்டார் ஏழு, எட்டுகட்டு வீடுகளில் பட்டுகளாலும் பஞ்சுகளாலும் விசித்திரமாக நெய்யப்பட்டும் தைக்கப்பட்டுமுள்ள வஸ்திரங்களையும் உடுப்புகளையும் உடுத்திக்கொண்டு உல்லாசமாயிருந்ததை நாம் மிருச்சகடியில் காணலாம். அவர்களுக்குப் பட்டணங்களில் வீடுகளும், பட்டணங்களுக்கு வெளியில் பங்களாக்களுமிருக்க நாம் காணலாம். அவர்கள் மாடுகளும் குதிரைகளும் பூட்டிய ரதங்களிலும் வண்டிகளிலும் சவாரி போவதையும், விசித்திரமான ஆடையாபரணங்களை யணிந்துகொண்டிருப்பதையும் இதே நாடகத்தைக்கொண்டு நாம் நிரூபிக்கலாம். ஆகையால் இந்த நாடகமானது நம்முடைய தேசம் பூர்வகாலத்திலடைந்திருந்த சீர்திருத்தத்தை ஸ்தாபிக்க முக்கியமான ஆதாரம்.

அந்நாடகத்தின் கடைசியில் ஒரு நியாய சபை வர்ணிக்கப்படப்போகிறது. இப்பொழுது நமது ஹைக்கோர்ட்டில் ஜட்ஜிகளும் ஜூரிகளும் உட்காருவதுபோல அக்காலத்தில் நடந்ததாக இந்நாடகத்தால் செம்மையாய்த் தெரியவருகிறது. இதைக்கொண்டு ஜட்ஜி இன்னிஸ் முதலான அனேக நியாயாதிபதிகள் நாம் அக்காலத்தில் வெகு நாகரிகத்தை அடைந்திருந்ததாக நிரூபித்திருக்கிறார்கள்.

ஆகையால் இந்தக் கிரந்தமானது வெகு விதத்தில் நம்மை மேன்மைப்படுத்தும் ஆதாரமாக விளங்குகிறது.

நடேசன்.

7 FEB 1914 MADRAS.

## இந்நாடகத்தில் வருகிற ஸ்திரீபுருஷர்களின்

# அட்டவணை

---

## புருஷர்கள்

சாருதத்தன்—உச்சயினியில் ஒரு பெரிய பிராமணன்; பணக்காரனாக விருந்து கேட்பவர்களுக்குக்கொடுத்து மெலிந்தவன்.

ரோஹஸேனன்—சாருதத்தன் மகன்.

மைத்திரேயன்—சாருதத்தனுடைய பிராண ஸிநேகிதன். விதூஷகனுமாம்.

வர்த்தமானன்—சாருதத்தனுடைய வேலைக்காரன்.

பாலகன் — உச்சயினியி லாண்டுவந்த கொடுங்கோன் மன்னன்.

சகாரன்—பாலகனுடைய தொடுப்பாகிய ஒருத்தியின் தம்பி. மகா மூடாத்மா, கெட்ட குணத்தின் வடிவம்.

விடன்—சகாரனுடைய தோழன், நற்குணமுள்ளவன்.

ஸ்தாவரகன்—சகாரனுடைய வேலைக்காரன்.

ஆர்யகன்—ஒரு இடையன். பாலகனுக்குப் பிறகு உச்சயினி அரசனாக வந்தவன்.

சர்விலகன்—ஒரு பிராமணன்; மதனிகை என்ற ஒரு தாசியை விலைக்கு வாங்க சாருதத்தன் வீட்டில் கன்னமிட்டவன்.

ஸம்வாககன்—சாருதத்தனிடம் கால் கை பிடிக்கிறவனுக விருந்து பிறகு சூதில் முழுகிக் கெட்டுக் கடைசி யாய் பௌத்த சன்னியாசியாய் மாறினவன்.

மாதுரகன்—சூதுக்காரன்.

தர்துரகன்—மற்ெருரு சூதாடி.

கர்ணபூரகன்—வசந்தசேனையின் யானைப்பாகன்.

சந்தனகன்
வீரகன் } உச்சயினியில் படைத்தலைவர்கள்.

ரேபிலன்—பாடகன்.

நியாயாதிபதி, செட்டி, குமாஸ்தா, கொலைக்காரர்கள்.

நியாயஸ்தலம்.

## ஸ்திரீகள்

தூதிகை—சாருதத்தன் பெண்சாதி.

வசந்தசேனை—சாருதத்தன் ஆசைநாயகி.

வசந்தசேனை தாயார்.

மதனிகை—வசந்தசேனையின் வேலைக்காரி.

ரதனிகை—சாருதத்தன் வேலைக்காரி.

பரபிருதிகை
பல்லவகை } வசந்தசேனையின் தோழிகள்.

நாடகத்தின் இடம் உச்சயினி.

FEB 1914
MADRAS

# மிருச்சகடி

வெகு காலங்களுக்குமுன் உச்சயினி மகாநகரத்தில் பாலகன் என்ற ஒரு கொடுங்கோன்மன்னன் அரசாண்டு வந்தான். அவன் நாளில் அந்த இராச்சியம் முடிய அநியாயம் குடிகொண்டிருந்தது. துஷ்டர்கள் வெகு வாய்த் தலையெடுத்து சூது, குடி முதலிய கொடிய நடத்தைகளில் தங்கள் காலங்களைக் கழித்துவந்தார்கள். ஒரு மரியாதையுள்ள ஸ்திரீயை மற்றொரு அன்னியன் தெருக்களில் துரத்துகிறதென்கிற காதாற் கேட்கக் கூடாத பாவகாரியங்கள் கூட பாலகன் காலத்தில் நடந்து வந்தன. இந்த பாலகனென்ற அரசனுக்குத் தொடுப்பு ஒருத்தி உண்டு. அவளுக்கு சகாரன் என்ற ஒரு தம்பி. இவன் மகாபாதகன். கெட்ட நடத்தையின் வடிவென்றே இவனைச் சொல்லலாம். வயிறு வெடிக்கத் தின்கிறதும் நாய் நரிகளுடன் வேட்டையாடுகிறதும், பொய்ப்பிராது தப்புப்பத்திரம் செய்கிறதும், எவளைத் தெருவில் கண்டாலும் அவளைப் பெண்டாளத் துரத்துகிறதும் சகாரனது நித்திய கருமங்கள். சகாரன் என்ற பெயர் சொன்னால் சிறு குழந்தைகளும் நடுங்குவார்கள். ஆனால் சகாரன் கொடிய நடத்தை யுள்ளவனே யன்றி யாராவது எதிர்க்க ஆரம்பித்தால் நடுங்குவான். இதல்

லாமல் இவன் மிகவும் கர்வமுள்ளவன். தான் ஸ்ரீமன் வாசுதேவன்போல அழகுள்ள மன்மதன் என்பதும், ஒவ்வொரு ஸ்திரீயும் தன்னைப்பார்த்து மோகிக்கவேண்டுமென்பதும் இவன் கொள்கை. அவர்கள் அப்படிச் செய்கிறதேயில்லை. இந்த சகாரன் என்ற துஷ்டாத்மா தான் தனது சௌந்திரியத்தைப்பற்றி எவ்வளவு கர்வமடைந்திருந்தானே அதுபோலவே தனது வித்தையைப்பற்றியும் அகம்பாவம் கொண்டிருந்தான். நாய்கள் நரிகளையும் தன்னைப்போலொத்த சில துஷ்டர்களையுந் தவிர இவன் வேறு ஒன்றையுமறியாவிடினும் மனதிற்குள் எல்லாமறிந்ததான எண்ண முற்றிலுமுண்டு. ஆனால் வாயைத் திறந்து பேச ஆரம்பித்தாலோ ஒன்றுவது சரியாக விருக்கமாட்டாது. அதனுடன் அர்த்தமில்லாமலும் அக்கிரமமாயும் பேசி சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வான். ராமாயண, மகாபாரத கதைகள் தெரிந்ததாக அபிநயித்துப் பேசுவான். ஆனால் ஒன்றுவது சரியாக விருக்கமாட்டாது. நியாயத்திற்கு எது எதிரிடையோ அதே சகாரனுடைய மதம்.

அதே உச்சயினியில் அக்காலத்தில் சாருதத்தன் என்ற ஒரு வியாபாரி யிருந்தான். பரம்பரையாய் அவன் முன்னோர்கள் சீமான்கள், வினயதத்தன் என்ற அவன் பாட்டனும் சகரதத்தனென்ற அவன் தகப்பனும் அவனவன் காலங்களில் பெரிய வியாபாரிகளாக விருந்தார்கள். சாருதத்தனும் தன் காலத்தில் வெகு செல்வம் பெற்றவனாக இருந்தான். ஆனால் கேட்பவர்களுக்கு அளவில்லாமல் தனது பொருளைக் கொடுப்பதிலும், தனது பட்டணத்தைச்சுற்றி மாடமாளிகைகள்

கூடகோபுரங்கள் கட்டுவதிலும், குளம்வெட்டுதல், தண்ணீர்ப்பந்தல்வைத்தல் முதலிய தருமங்களிலும், சாருதத்தன் தனது பொருளை எல்லாம் செலவழித்தான். நற்குணம், நற்செய்கை இவைகளுடன் நயம், அம்ரிக்கை, பெருந்தோரணை, எல்லாரையும் சமமாய்ப் பார்த்தல் முதலான பெருமைதங்கிய குணங்கள் சாருதத்தனிடமிருந்தன. தெய்வபக்தி, பிராமணவிஸ்வாஸம், கல்விமான்களிடம் பிரியம் இவ்வித நற்குணங்களுக்கும் சாருதத்தன் இருப்பிடமாயிருந்தான். யார் வந்து கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் சாருதத்தன் தருமங்களையும் மற்றக் கொடைகளையும் நடத்திவரவே, இவன் கைப்பொருளெல்லாம் குறைந்துவிட்டது. அப்பொழுது ராச்சியம் பாலகன் வசமிருந்ததால் கெட்டவர்களே மேலிட்டிருந்தார்கள். சாருதத்தன் நன்றாய் வாழ்ந்த காலத்தில் அவனிடம் பிடுங்கித்தின்ற ஒருவனுவது அவன் கஷ்டப்படுங்காலத்தில் அவனை எட்டிப் பார்க்கவேயில்லை. அதுகூட அவனுக்கு வருத்தமில்லை. ஐயோ! நாம் ஏழையாய்ப் போய்விட்டோமென்று நமது வீட்டை ஒரு அதிதியும் எட்டிப் பார்க்கமாட்டேனென்கிறுனே என்று துக்கப்படுவான். உலகம் எப்பொழுதும் பணத்தாசை கொண்டதல்லவா? சிலர் தான் ஏழையாய்ப் போய்விட்டதற்காகத் தன்னை அவமானம் பண்ணிஞல் ஐயோ எனக்குப் பணம்போய்விட்டதென்ற துக்கமில்லவே யில்லை. அதிர்ஷ்டமிருந்தால் பணம் வருகிறது இல்லை யாஞல் வந்தபணங்கூடப் போய்விடுகிறது. அதற்காக எனக்குக் கொஞ்சங்கூட விசனமில்லை. நான் ஏழையாய் விட்டேனென்று ஜனங்கள் என்னிடத்திலிருந்த

பழைய சிநேகத்தைக்கூட மறந்துவிடுகிறார்களே என்று கண்ணீர் வடிப்பான்.

யாருக்கும் முதலில் கஷ்டப்பட்டுப் பிறகு சுகப்பட்டால் இருட்டாயிருந்த விடத்தில் விளக்குவைத்தால் எப்படி பிரகாசிக்குமோ அப்படி அவன் அதிர்ஷ்டம் விளங்கும். முதலில் சுகத்தை அனுபவித்துவிட்டுப் பிறகு கஷ்டப்படுகிறதென்றால் யாவருக்கும் சிரமமே. அம்மனிதன் மனதில் மானத்தாற் செத்து நடைப்பிண மாகப் பிழைத்திருக்கிறான் என்றே சொல்லவேண்டும். எப்பொழுது ஒரு மனிதனுக்கு தரித்திரம் வருகிறதோ அப்பொழுது அதனுடன் வெட்கமும் வந்து விடுகிறது. எப்பொழுது வெட்கம் வந்ததோ அப்பொழுது முகத்தின் களை அவனுக்குக் குன்றும். களை எப்பொழுது குறைந்ததோ அப்பொழுது போகிறவிடத்தில் அவனுக்கு அவமானம் நேரிடுமென்பதில் என்ன சந்தேகம்; அவமானம் எப்பொழுது வந்ததோ அப்பொழுது துக்கமும் உடனே வரும். மனதுக்கு எப்பொழுது துக்கம் வந்ததோ அப்பொழுது புத்தி குறையும்; புத்தி குறைந்தால் நாசம் உடனே வரும்; ஆகையால் தரித்திரம் ஒரு மனிதனை என்ன கஷ்டதிசையிற்தான் கொண்டு வந்து விடாது; நாளைப்பொழுதுக்கு நமக்கு யார் கொடுப்பார்கள் ஈசுவரா என்று ஒரு மனிதனைத் தரித்திரமானது எப்பொழுதும் சிந்தைபட்டுக் கொண்டிருக்கச் செய்யும்; நம்மை மதித்துப் பேசினவர்கள் தரித்திரம் வருங்காலத்தில் எட்டியேபார்க்க மாட்டார்கள். ஒருவனை நாமாகவே பார்க்கப் போனால் ஏன் இவன் அடிக்கடி வந்து தொந்தரை பண்ணுகிறானென்று அவன் மனதில் அருவ

ருப்புக் கொள்வான். நமது சொந்த ஜனங்கள்—பெண்சாதி பிள்ளைகளும் நம்மைக் கடுகடுப்பார்கள். எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் காட்டுக்குப்போய் சுகமாயிருக்கலாமா என்ற புத்தியுந் தோன்றும். முதலில் அவனுக்கு சிநேகிதர்களாயிருந்தவர்கள் எல்லாரும் அவனுக்கு தரித்திரம் வருங்காலத்தில் சத்துருக்களாய் விடுவார்கள். பிறர் செய்த குற்றம் தரித்திரன் தலையில் வந்து விடியும். இவ்வளவு கஷ்டங்களும் சாருதத்தனுக்குத் தான் பணக்காரனாக இருந்து கஷ்டதிசைக்கு வந்துவிடவே கூடவந்தனவென்றே சொல்லலாம். ஆனால் தனது தனங்களை எல்லாம் இரப்பவர்களுக்குக் கொடுத்துத் தரித்திரனான படியால் ஈசுவரன் தன்னை நல்லகதியில் விடுவாரென்று நம்பி கோடையில் ஜனங்களுக்குத் தீர்த்தத்தைக் கொடுத்த குளம் மழைகாலத்தில் மறுபடியும் தான் நிரம்பிவிட எதிர்பார்ப்பதுபோல எதிர்பார்த்திருந்தான். என்ன துக்கமும் வெறுப்புமிருந்தாலும் சாருதத்தன் தான் செய்யவேண்டிய காரியத்தில் குறைவுவைக்கமாட்டான். ஈசுவரன் தன்னை என்ன ஸ்திதியில் வைத்த போதிலும் அவரைத் தான் வெறுக்காமல் தவத்தினாலும் மனதினாலும் வாக்கினாலும் இன்னும் மற்ற கருமங்களாலும் பூசைசெய்தால்தான் தனக்கு நற்கதி உண்டு என்று நம்பி அந்தப்படி நடந்துவருவான். நல்லவனைத் தான் ஸ்வாமியும் பரிசோதிப்பார். அதுபோல என்ன தான் இவன் செய்துவந்தும் சர்வதயாபரனான ஈசுவரனுக்கு சாருதத்தன்பேரில் தயை வரவில்லை. தரித்திரம் நீங்குகிறதாகத் தோன்றவில்லை. அதனுடைய உபத்திரவம் தனக்கே பொறுக்கமாட்டாமற் போகவே, சாருதத்

தன் தரித்திரத்தை ஒரு புருஷனாகப் பாவித்து "என் மித்திர ரத்தினமாகிய தரித்திரமே! என் பிராண சிநேகிதனாக நீ யிருந்துவிட்டாய், மனித வாழ்க்கை அநித்தியம். நான் கொஞ்ச காலத்தில் போய் விடுவேனே, எனக்குப் பிறகு என்னைப்போலொத்த மனிதன் ஒரு வனைப் பிடித்துக்கொள்ள உனக்கு யார் அகப்படுவார்கள் என்று இந்த ஒரே சிந்தைதான் என்னை இரவும்பகலும் பீடிக்கிறது" என்று விசனப்படுவான்.

சாருதத்தன் என்ற இந்த மகானுபாவனுக்கு மைத்திரேயன் என்று ஒரு தோழனிருந்தான். அவன் அகசியக்காரனுமாம். எஜமானனிடம் வெகு விசுவாசம் வைத்திருந்ததுடன் அவன் கஷ்டத்தைத் தன் கஷ்டமாக எண்ணி, அவனுக்கு வந்த கஷ்ட காலத்தைக் குறித்து அடிக்கடி தனிமையில் பரிதபிப்பான். எஜமானனுடனிருக்கும்பொழுதோ அவன் மனதைக் களிப்பிக்கத் தகுந்தபடி சந்தோஷமாய்ப் பேசுவான். அகசியக்காரனாக விருந்தபோதிலும் வெகு மானி. எஜமானனுக்குக் கஷ்டம் வந்துவிட்டதென்று வேறு யாராவது இவனைச் சாப்பிடக் கூப்பிட்டாற் போகான். சாருதத்தனுடன் அகப்படுகிற கூழையோ கஞ்சியையோ குடித்துவிட்டு சந்தோஷமாயிருப்பான்.

சாருதத்தனுக்குத் தூதிகை என்ற ஒரு தர்மபத்தினி யிருந்தாள். மகாலக்ஷ்மி என்றால் அவளுக்கே தகும். தனது புருஷன் நல்ல ஸ்திதியிலிருந்து தரித்திரனாகப் போய்விட்டானே என்ற துக்கம் அவள் மனதிலிருந்த போதிலும் ஒருநாளும் அதைக்கொண்டு தன் புருஷனை இக்காலத்துப் பெண்கள் சிலரைப்போல அவமதிக்

காள். கையிலிருந்த பொருளைச் செலவழித்துவிட்டதற்காக அவரை நோக்கிக் கடுத்துப் பேசாள். அவள் பெரிய வமிசத்துப் பெண். தனது பிறந்தகத்து பொன் புடவைகள் அவளிடம் அநேக மளவற்றவைகளிருந்தன. புருஷன் பண்ணிப்போட்டவைகளும் வெகுவாயிருந்தன. ஆனாலவைகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மைத்திரேயனிடம் கொடுத்துப் பணமாய் மாற்றி வீட்டுச் செலவுக்கு உபயோகப்படுத்திக்கொள்வாள். சுருக்கிச்சொல்ல ஈசுவரபக்தி, புருஷனிடம் பிரீதி, நற்குண நற்செய்கை இவைகளெல்லாம் அவளிடம் குடிகொண்டிருந்தன. இந்த அம்மணி வயிற்றிற் சனித்த ரோஹசேனன் என்ற ஒரே குழந்தை சாருதத்தனுக்குண்டு. பரம்பரையாக நற்குணமுள்ள பெரிய குலத்திலுண்டாகிய இந்தக் குழந்தை தனது இளமைப்பருவத்திலேயே தனது பெரும் பிறப்பை உச்சயினியிலுள்ள பெரியவர்களுக்குக் காட்டி வந்ததென்றே சொல்லலாம். நமது கதை தொடங்குங் காலத்தில் இவன் நாலு ஐந்து வயது குழந்தையாகவிருந்தான்.

அதே உச்சயினி என்னும் பட்டணத்தில் வசந்தசேனை என்ற ஒரு தாசியிருந்தாள். அவள் ஜாதியில் கணிகை என்றாலும் குணத்தில் குலஸ்திரீக்கு ஒப்பானவள். அவள் சாருதத்தனிடம் தன்னுடைய இளமைப் பருவத்தின் சுகத்தை அடைந்துவந்தாள். அவனைத் தவிர வேறு ஒருவரையும் அவள் மனதாற்கூட எண்ணினதில்லை. சாருதத்தனுடைய குணத்தால் ஜயிக்கப்பட்டு முற்றிலும் அவனிடத்திலேயே, தனது ஜாதிக்கு விரோதமாகத் தன் பிரியங்களை வைத்துவிட்டாள். ஆனால்

கணிகைகள் பணமுள்ளவரையில் ஒரு புருஷனிடம் அன்பாக விருப்பார்கள். அப்புறம் அவன் ஏழையாய்ப் போனால், உடனே அவனை விட்டுப் போய்விடுவார்களென்று ஜனங்கள் எண்ணக்கூடும். அதற்கு முற்றிலும் விரோதமாய் சாருதத்தன் ஏழையாய்ப்போன பிறகுகூட அவனிடம் வசந்தசேனை அதிக அன்புபாராட்டி வந்தாள். இவள் குணத்தில் குலஸ்திரீ என்று முன்னமே சொல்லியிருக்கிறோமே. வசந்தசேனை மகா பணக்காரி. உச்சயினியில் அவள் வீடு அரசனரண்மனையைவிட மேலாக விளங்கிற்று. இந்திரலோகமோ அல்லது சுவர்க்கமோ என்று அதைப் பார்த்தவர்கள் நினைக்கவேண்டியிருந்ததேயன்றி சாதாரண வீடாகத் தோன்றவேயில்லை. அது எட்டுக்கட்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதற்கட்டில் அநேக புஷ்பங்களுடைய வாசனைகள் மனதைக் களிப்பிக்கும். எங்கு பார்த்தாலும் நன்றாய் பச்சைப் பசேலென்று மெழுகி விதம் விதமான இழைக்கோலங்கள் போடப்பட்டிருக்கும். சுவர்களில் சித்திரவேலை செய்யப்பட்டு எதிருமெதிருமாக விருக்கும் யானைத்துதிக்கைகளில் மல்லிகைத்தோரணங்கள் கட்டப்பட்டிருக்கும். தங்கங்களிழைத்த கதவுகளும், மரகதக்கற்களா லிழைக்கப்பட்ட பூரண கும்பங்களும், அவையவைகளுக்குரிய விடங்களில் பார்ப்பவர்கள் கண்ணைப்பறிக்கும். மங்களக்கொடிகள் ஆகாயத்தை யளாவி பார்த்த விடங்களிலெல்லாம் விளங்கும்.

இரண்டாவது கட்டில் வெளேலென்ற இழைக்கோலங்கள் விதம் விதமாய் சந்திரன் கலையோ தாமரைத் தண்டோ என்று பார்க்கிறவர்கள் மனதை மயக்கும். தங்கத்தாலும் விலையுயர்ந்த கற்களாலுமிழைக்கப்பட்ட

படிகள் நடக்கிறவர்கள் காலைக் கூசச்செய்யும். நல்ல முத்து சரங்களோடும் கூடி ஸ்படிகக் கற்களால் இழைக்கப்பட்டிருக்கும் ஜன்னல்கள் பார்ப்பவர்கள் மனதை முற்றிலும் சந்தோஷப்படுத்தும். கொஞ்சதூரத்தில் மழமழவென்று கொம்புகளில் எண்ணெய் தடவிவிடப்பட்டு நன்ருய்த்தின்று கொழுத்திருக்கும் எருதுகள் முக்காரம் போட்டுக்கொண்டு வெள்ளி மலைகள்போல் விளங்கும். சண்டை ஆட்டுக்கடாக்கள், கொம்புகளில் சலங்கைகளுடன் அலைந்துகொண்டிருக்கும். ஒரு பக்கத்தில் அநேக ஆள்கள் குதிரைகளைக்கட்டி அவைகளுக்கு அலங்காரம் செய்துகொண்டிருப்பார்கள். இன்னமொரு பக்கத்தில் யானைப்பாகர்கள் அநேக நல் வார்த்தைசொல்லி ஒவ்வொரு பிடியாய் அரிசியும் வெல்லமும் யானைக்குக் கொடுப்பார்கள். கருங்குரங்கு, செங்குரங்கு முதலான குரங்கு ஜாதிகள் கண்டவர்களுக்குப் பல்லைக் காட்டி சேஷ்டை பண்ணிக்கொண்டு ஒருபக்கம் உட்கார்ந்திருக்கும்.

மூன்ருவது கட்டு, பார்க்கவரும் ஜனங்கள் உட்காருவதற்காக விருந்தபடியால் எங்கு பார்த்தாலும் புஸ்தகங்கள் அவரவர்களுக்கிஷ்டப்படி காலத்தைக் கழிக்க வைக்கப்பட்டிருக்கும்; அதோ யாரோ பாதி படித்துவிட்டுத் திறந்தபடியே ராமாயணப் பலகையில் புஸ்தகத்தை வைத்துவிட்டுப் போயிருக்கிருன். அநேக கணிகைகள் அவ்விடம் வந்து சந்தோஷமாயும், வேடிக்கையாயும் பேசிக்கொண்டிருப்பார்கள். கூடுகளில் வேடிக்கை வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டு கிளிகள் வந்தவர்களை எல்லாம் க்ஷேமம் விசாரிக்கும்.

நான்காவது கட்டு, பாட்டில் பிரியப்பட்டவர்கள்

கூடும் இடம். பாலியப்பருவமுள்ள பெண்களின் கைக ளாலடிக்கப்பட்ட மிருதங்கங்கள் மேகங்கள்போல் கர்ச் சிக்கும். தங்கள் பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியத் தால் நக்ஷத்திர ஜன்மமெடுத்துப் பிறகு புண்ணியங்கள் எல்லாம் நாசமாய்ப் போனபிறகு உதிர்ந்துபோகும் நக்ஷத் திரங்கள்போல ஜாலர்கள் போடப்படும். சிலர் புள்ளாங் குழல் வாசிப்பார்கள். சிலர் தன்மேற் கோபித்துக் கொண்டிருக்கும் ஸ்திரீயை சந்தோஷப்படுத்த அவளைத் தன் மடியில் உட்காரவைத்துக்கொண்டு அவள் தலைமயி ரைத் தடவிக் கொடுப்பதுபோல வீணைவாத்தியத்தைக் கையால் தடவி வாசிப்பார்கள். தோட்டத்தில் புஷ்பங் களிலிருக்கும் தேனை நன்ருகக் குடித்துவிட்டுக் கூத்தா டும் வண்டுகள்போல சில வேசிகள் கூத்தாடிக்கொண் டிருப்பார்கள்.

ஐந்தாவது கட்டு, சமையல்கட்டுப்போலிருக்கிறது. புத்துருக்கு நெய்யில் பொரிக்கப்படும் பட்சணங்கள் ஒரு நாழிகை வழிதூரத்திலேயே அங்கு வரப்பட்ட வர்கள் நாக்கில் ஜலமூறச்செய்யும்: அநேகவித காய் கறிகளுடைய வாசனைகளும் விதம்விதமான பட்ச ணங்களும், பார்க்கிறவர்கள் மனதைக் கவரும். மோத கங்களும், அபூபங்களும் மலைமலையாய்ப் பண்ணிக் குவிக் கப்பட்டிருக்கும். வருகிறவனுக்கெல்லாம் ஆசாரோப சாரம் செய்து சாப்பிடுங்கள், இதோ பட்சணம், இதோ சித்திரான்னம், இதோ காய், இதோ கறி என்ற உப சாரம் நடந்துகொண்டேயிருக்கும்.

ஆருவது கட்டிலோ தங்கங்களாலும் நீலக்கற் களாலு மிழைக்கப்பட்ட, தோரணங்கள் வருஷாகாலத்

தில் ஆகாசத்திலுண்டாகும் இந்திரதனுசோ என்ற சந்தேகத்தைப் பார்க்கிறவர்கள் மனதில் உண்டாக்கும். அநேக சிற்பிகள் வெகு தேசங்களிலிருந்து வந்து முத்து, பவளம், புஷ்பராகம், வைடூரியம், பதுமராகம், மரகதம், மாணிக்கம் முதலான கற்களில் வேலை செய்வார்கள். ஒருபக்கத்தில் முத்துமாலை தொடுக்கப்படுகின்றது, மற்றொரு பக்கத்தில் வைடூரியங்களுக்கு ஒருவன் பட்டை தீருகிறான்; மற்றொரு பக்கத்தில் சங்கங்களுக்கு மெருகு போடுகிறான். மற்றொரு இடத்தில் பவளங்களைச் சாணை பிடிக்கிறான். குங்குமங்களாலும் கஸ்தூரி ரசங்களாலும் ஒருபக்கம் சித்திரக்காரன் சித்திரவேலை செய்கிறான். ஒருபக்கத்தில் கம் என்று வாசிக்கும் சந்தனத்தை ஒரு மனிதன்மேல் ஒரு கணிகை பூசி விசிறியால் வீசுகிறாள். மற்றொருவள் வாசனை திரவியங்களோடு கூடிய வெற்றிலைப்பாக்கைக் கொடுக்கிறாள். ஒரு இடத்தில் கூத்தும் பாட்டும் கேளிக்கையும் நடந்து கொண்டிருக்கின்றன. மற்றொரு இடத்தில் சீப்பிச் சீப்பி தங்கக் கிண்ணங்களிலிருந்து மதுவை ஸ்திரீ புருஷர்கள் குடிக்கிறார்கள்.

ஏழாவது கட்டில் அநேகவித பட்சிகள் தங்கள் காலத்தை சந்தோஷமாகப் போக்கும். நெருங்கி உட்கார்ந்துகொண்டு மாடப்புறாக்கள் ஒன்றையொன்று முத்தமிடும். பிராமணார்த்தம் நன்றாகச் சாப்பிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டு வேதம்படிக்கும் மகா பிராமணன்போலக் கிளிப்பிள்ளை கூட்டிலிருந்தபடியே நல் வார்த்தைகளைக் கொஞ்சிப் பேசும். கோகிலங்கள் அநேக பழங்களைத் தின்றுவிட்டு நெஞ்சு கட்டிக்கொண்டது

போலக் கூவும். தந்தத்தா லடிக்கப்பட்ட முளைகளில் கிளிக்கூண்டுகள் தொங்கும். அநேக ஆபாரணங்களால் அலங்கரிக்கப்பட்டு சந்தோஷத்துடன் மயில்கள் சூரியனுடைய கிர்ணங்களையொக்கும் தோகைகளால் விசிறிக் கொண்டு கூத்தாடும். ராஜஹம்சங்கள் ஜோடி ஜோடியாய் சந்திர கிரணங்களை உருட்டித் திரட்டி வைத்தாற் போல விளையாடிக்கொண்டிருக்கும். உலகத்திலுள்ள அநேகவிதமான பட்சிகளெல்லாம் வசந்தசேனை தனது ஏழாம் கட்டில் கொண்டுவந்து வைத்திருந்தாள்.

எட்டாவது கட்டில் விசித்திரமான வண்டிகளும் ரதங்களும் விமானங்களும் விதம் விதமாய்ச் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். இப்படி எட்டுக் கட்டுகளோடுங்கூடி எங்குபார்த்தாலும் புஷ்பச்செடிகளும் கொடிப்பந்தல்களும் திட்டாணிகளும் ஊஞ்சல் பலகைகளும் நிறைந்த அந்த வீட்டையும் தோட்டத்தையும் பார்த்த பெயர்கள் இது குபேரன் அரண்மனையோ, சுவர்க்கமோ என்று மயங்குவார்களே யல்லது வேசிப் பெண்ணாகிய வசந்தசேனையின் வீடு என்று சொல்ல மாட்டார்கள்.

இவ்வளவு சம்பத்துள்ள அந்த வசந்தசேனை தனது பிரியத்தை முற்றிலும் சாருதத்தனிடமே வைத்துவிட்டாள். உச்சயினியில் காமதேவன் தோட்டம் என்று விசித்திர தோட்டம் ஒன்றுண்டு. அங்கு ஒருநாள் சாருதத்தன் வேடிக்கைபார்க்க வந்திருந்தான். அன்று தனது கன்னிப்பருவத்தை இன்னும் கழிக்காமலிருந்த வசந்தசேனையும் தோட்டத்தில் வேடிக்கைபார்க்க வந்திருந்தாள். அங்கு சாருதத்தனை அவள் பார்த்தது முதல் தனது

டிருக்கக்கூடும். அவளைத்தன் ராமாயணத்தில் குந்தியாகப் பண்ணிக்கொண்டான். பின்னும் ஓடும் வசந்தசேனை யைப் பார்த்து சகாரன் அடியே முடிச்சவிழ்க்கிறவளே,* வேசியே, மீன்தின்னியே, கூத்தாடியே, மூக்கறுந்தவளே, குலத்தைக் கெடுத்தவளே, மன்மதன் பெட்டியே, குட்டியே, வேசியே, தாசியே, தாசிப்பெண்ணே இப்படிப் பத்துபெயர் வைத்தழைத்தும், திரும்பிப் பார்க்கிறாய் இல்லையே என்பான். இவன் வைத்த பெயர் பதினொன்று : ஒவ்வொன்றும் வெகு அழகான பெயர்களே !! என்ன சொன்னாலும் அவள் திரும்பி பார்க்கப் போகிறாளா. இப்படி ஓடிக்கொண்டு வருகையில் சாருதத்தன் வீட்டிற்குச் சமீபத்தில் எல்லாரும் வந்துவிட்டார்கள்.

சாருதத்தன் அப்பொழுதுதான் தனது ஜபதபங்களை முடித்து வாயிலில் பலியைப் போட்டுவா தனது, ஒரே தோழனாகிய மைத்திரேயனையும் வேலைக்காரி ரதனிகையையு மனுப்பினான். மைத்திரேயன் கையில் விளக்கை எடுத்துக்கொண்டான். ரதனிகை பலியை எடுத்துக்கொண்டாள். இவர்கள் பலியை வாயிலில் போட வருங்காலமும் வசந்தசேனை அங்குவந்து சேருங்காலமும் கிட்டத்தட்ட சரியாயிருந்தது. கதவைத் திறக்கவே வாசற்காற்றின் பலத்தால் விளக்கு அணைந்தது. சுவாமி நமது பங்கிலிருக்கிறார் என்று உடனே வசந்தசேனை

* இவ்விடத்தில் நாணகம் என்ற நாணயம் வருகிறது. சகாரன் நாணகத்தை அவிழ்க்கிறவளே என்று வசந்தசேனையை யழைக்கிறான். இந்த நாணகம் என்ற நாணயம் 1,700 வருஷங்களுக்கு முந்தி வழங்கியபடியால் இக்கதையின் காலத்தைக் குறிக்கிறது.

இருட்டில் சாருதத்தன் வீட்டிற்குட் புகுந்தாள். விளக் கவிந்துவிடவே அதை ஏற்றிவர மறுபடி மைத்திரேயன் உட்சென்ருன். வசந்தசேனையைத் துரத்திக்கொண்டு வந்த சகாரன் பலியை எறியவந்த ரதனிகையைப் பற்றினன். அவள் கூச்சலிடவே அதைக்கேட்டு சகா ரன் பிடித்தேன் இவளைத் தலையில் பிடித்தேன் கொண்டை யிற் பிடித்தேன் கூந்தலிற் பிடித்தேன் நீ என்னதான் கத்து கூப்பிடு அலறு சம்புவைத்தான் கூப்பிடு சிவனைத் தான் கூப்பிடு அல்லது சங்கரனைத்தானழை அல்லது ஈசுவரனைத்தானழை உன்னை நான் விட்டேனே பார் என் ருன். இந்த மூடன்மனதில் சம்பு, சங்கரன், சிவன், ஈசு வரன் இவர்கள் தனித்தனியாய் நான்கு வேறு தெய்வங்கள் என்றெண்ணம். இப்படி இவள் கூச்சலிடவே மைத்தி ரேயன் ஓடிவந்து யாரவன் இப்படிச் செய்தவன். ஏனிப் படி நடந்தாய். சரியான உத்தர மில்லாவிட்டால் உன் மண்டையை நூறு துண்டாக நொறுக்கிறேன் என்று ஒரு பெரிய தடியைத் தூக்கிக்கொண்டு வந்தான். சகாரன் யாராவது எதிர்த்தால் பயப்படுகிறவன் என்று முன்னமே சொல்லியிருக்கிறேமே. அவன் மைத்திரேயன் ஓங்கிப் பேசினதைக் கேட்கவே நடுநடுங்கி ரதனிகையை விட் டான். சகாரனுடன் கூடவந்த விடன் சேடன் இருவர் களும் வந்து மைத்திரேயன் காலில் விழுந்து வேறு ஒரு ஸ்திரீயைத் தாங்கள் தொடர்ந்ததாகவும், அவளென்று எண்ணி ரதனிகையைப் பிடித்ததாகவும் மன்னிக்க வேண்டுமென்றும், ஆரிய சாருதத்தன் காதில் தெரிவிக்கக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டு புறப்பட்டார்கள். ஏனெ னில் இவர்கள் சாருதத்தனுடைய குணம் என்ற

ஆயுதத்தைக்கண்டு நடுநடுங்கினவர்கள். ஆரியசாருதத்தனே என்றால் தான் வாழ்ந்த காலத்தில் தரித்திரர்களுக்கெல்லாம் கற்பகத்தருவாயிருந்தவன். தனது குணங்களால் கர்வப் படாமற் றலைவணங்கினவன். நல்லவர்களுக்கெல்லாம் கொடுப்பவன். எல்லா வித்தையுங் கற்றவன். நன்னடக்கைக்கு உறைவிடம். நன்னடத்தை என்ற கரையால் சூழப்பட்ட சமுத்திரம். நற்செய்கை பொருந்திய மகான். ஒருவரையும் அவமதியான். நற்குணங்களுக்கு ஒரு சுரங்கம். உதாரி. இந்த மகான் மனதிற்கு எங்கு வருத்தமுண்டாகுமோ என்று விடனும், சேடனும், மைத்திரேயனை அவரிடம் ஒன்றுந் தெரிவிக்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டார்கள். அவனும் ஒப்புக்கொண்டான். சகாரனுக்குமட்டில் அது பொறுக்காமல் யாரவன் சாருதத்தன் ஒருவேளைச்சோறு அவனிடம் உண்டா? அவன் என்ன சுவேதகேது என்ற பஞ்சபாண்டவர்களில் ஒருவனா? ராதையினுடைய குமாரன் ராவணனா? அல்லது குந்திக்கும் ராமனுக்கும் பிறந்த இந்திரபுத்திரனா? அசுவத்தாமாவா? தர்மபுத்திரனா? ஜடாயுவா? என்று விடைத்தான். இவன் கதைகளின் சம்பந்தம் இவனே தான் சொல்லவேண்டும். பிறகு இவர்கள் எல்லாரும் வீட்டிற்குத் திரும்பிவிட்டார்கள்.

ரதனிகை நிற்கவேண்டிய இடத்தில் வசந்தசேனை போய் நின்றாள். சாருதத்தன் வசந்தசேனையை அன்று எதிர்பாராதவனாகையால் அடியே ரதனிகே, குளிர்ந்த காற்றடிக்கிறது, குழந்தை ரோகசேனனை உள்ளே கொண்டுபோய் விடு என்றான். இவள் வேசி உள்ளே போகக்கூடாதாகையால் பேசாமல் நின்றாள். ஆகா!

ரதனிகைகூட நமது சொற்கேட்கவில்லை என்று சாருதத்தன் நினைத்துக்கொண்டிருக்கையிலேயே வாசலிலிருந்து மைத்திரேயனும் ரதனிகையும் பலியைப் போட்டுவிட்டு வந்தார்கள். ரதனிகையைக் கண்டதும் இன்னமொரு ஸ்திரீ யாரென்று சாருதத்தன் பார்க்கையில் அவள் வசந்தசேனை என்று தெரிந்தது. உடனே அவளுக்கு ஆசாரோபசாரம் பண்ணி உட்கார வைத்து வந்த வரலாற்றை சாருதத்தன் விசாரித்தான். அவள் நடந்த சங்கதியைச் சொன்னாள். இப்படித் தனியாய்ச் சாயுங்கால வேளையில் புறப்படக்கூடாதென்று சாருதத்தன் அவளிடம் கேட்டுக்கொண்டான். வசந்தசேனை "என் நகைகளை இங்கே வைத்து விடுகிறேன், மைத்திரேயனைமட்டும் கூட அனுப்புங்கள். நான் திரும்பி வீடு போய்ச் சேருகிறேன்" என்றாள். நகைகளை வாங்கி வைத்துக்கொண்டு கொஞ்ச நாழிகைக்கெல்லாம் தானே வசந்தசேனையுடன் சென்று அவளை அவள் வீட்டண்டை விட்டுச் சாருதத்தன் திரும்பி வந்தான். பிறகு தனது ஒரே சிநேகிதனை மைத்திரேயனைப் பார்த்து நமது வசந்தசேனை நம்மிடம் வைத்துப் போயிருக்கும் ஆபரணங்களை நான் பகலில் வைத்துக் காப்பாற்றிக் கொடுக்கிறேன். நீ இராத்திரியில் வைத்துக் காப்பாற்றிக் கொடுக்கவேண்டுமென்றான். அவனுமப்படியே செய்ய ஒப்புக்கொண்டான். அன்றுமுதல் அப்படியே நடந்து கொண்டு வந்தது.

பாலகன் ராஜ்யத்தில் அநியாயங்கள் வெகுவாய் நடந்துகொண்டிருந்தன வென்று முன்னமே நாம் சொல்லியிருக்கிறோமல்லவா. ஒருநாள் யாரோ ஒரு சித்தபுரு

ஷன் அரண்மனைக்கு வந்திருந்தபொழுது பாலகனிடத்தில் அவனுடைய அதிகாரம் குறுகிவிட்ட தென்றும், அடுத்த கிராமத்திலிருக்கும் ஆரியகன் என்ற ஒரு சாதாரண மனிதன் அரசனாகப் போகிறதாகவும் சொல்லிப்போனான். இந்த ஜோசியம் கேட்டவுடன் பாலகனிடம் வெறுப்புற்றிருந்த அநேக ஜனங்கள் ஆரியகனிடம் சென்று அவனுக்கு நல்ல காலம் வரப்போகிறதைச் சொல்லி அப்பொழுது அவனுக்குத் தாங்கள் சகாயம் செய்வதாகத் தெரிவித்திருந்தார்கள். பாலகன் என்ற கொடிய மன்னன் இவைகளை எல்லாம் அறிந்து கொண்டு மெதுவாய் ஆரியகனைப் பிடித்துக் கொட்டடியில் போட்டான்.

உச்சயினியில் பாலகன் காலத்தில் கெட்ட விளையாட்டுகளான சூது முதலியவைகளில் வேலையற்றவர்கள் தங்கள் காலங்களைக் கழித்துவந்தார்கள். மாதுரகன், சபிகன், தர்துரகன் என்ற மூவரும் சூதாட்டத்தில் மிகவும் தேர்ந்தவர்கள். இவர்கள் சூதாலேயே பணத்தைத்தேடி, பெண்டுபிள்ளைகளைச் சம்பாதித்து, வயிற்றை வளர்த்து, எல்லாவற்றையு மழிப்பார்கள். ஒரே ஆட்டத்தில் எல்லாவற்றையுமிழந்து கடன்காரனுக்குப் பணங்கொடுக்கச் சக்தியில்லாமல் அவன் செய்யும் இம்சைகளுக் குட்படுவார்கள். ஒரே ஆட்டத்தில் பணக்காரர்களாவார்கள். இவர்கள் கூட்டத்தில் யாரார் வேலையற்றிருப்பார்களோ அவர்கள் எல்லாம் சேருவது வழக்கம். சேரும்பொழுது சூதாடத் தெரியாவிட்டாலும் பார்த்துக்கொண்டிருப்போம் என்று சேர்வார்கள். பிறகு கொஞ்சங் கொஞ்சமாய் ஆடக் கற்றுக்கொண்டு

தாங்களும் கெட்டுப்போவார்கள். இப்படி இவர்கள் கூட்டத்தில் ஸம்வாககன் என்றொருவன் சேர்ந்தான். இவன் ஒருநாள் மாதுரகன், சபிகன் என்ற இவ்விருவர்களுடன் சூதாடி பத்துப்பொன் கடன்பட்டு அதைக் கொடுக்கச் சக்தியில்லாமல் ஓடினான். மாதுரகனும், சபிகனும் அவனைப் பிடித்துக்கொண்டு அடிக்க ஆரம்பித்தார்கள். இந்தச் சமயத்தில் தர்துரகன் என்ற மற்றொரு சூதன் வந்து சபிகன் கண்ணில் மண்ணைவாரிப் போட்டு ஸம்வாககனைத் தப்பச் செய்தான். இப்படித் தப்பிப்போன ஸம்வாககன் வசந்தசேனை வீட்டு உட் சென்று ஒளிந்துகொண்டான். ஆனால் சண்டையில் இவன் மூக்கு உடைபட்டு இவன் போகும் வழியெல்லாம் இரத்தம் சிந்தியிருந்தது. இப்படி மண்ணைவாரித் தூவினதால் தர்துரகன் சபிகனை விரோதித்துக்கொண்டான். ஆனால் இந்த சபிகன் கொடுங்கோன் மன்னனான பாலகனுக்கு மிகவும் வேண்டியவன். சண்டைவந்து விட்டபிறகு தர்துரகன் யோசித்து இனி நாமிங்கிருக்கக்கூடாது. சபிகனை விரோதித்துக்கொண்டது பாலகனை விரோதித்துக்கொண்டதற்குச் சமானம். இனி நாமிதைவிட்டு ஆரியகனுடைய வரவை எதிர்பார்க்கும் கக்ஷிக்காரர்களிடம் சேரவேண்டும் என்று யோசித்து ஓடிவிட்டான்.

தர்துரகன் ஓடிவிட்ட கொஞ்ச நாழிகைக்கெல்லாம் சபிகனுக்கு ஸ்மரணைவந்தது. கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்க்கையில் ஸம்வாககனைக் காணோம். ஆனால் அவன் போனவழி அவன் மூக்கினின்று கொட்டியிருக்கும் ரத்தத்தால் காணக்கூடியதாக இருந்தது.

அதைப் பிடித்துக்கொண்டு சபிகனும் மாதுரகனும் அவன் போயிருக்கும் இடத்தை நாடிச்சென்றார்கள். ஸம்வாககன் வசந்தசேனை வீட்டிற்குள் சென்றதாக முன்னமே சொன்னோமே. அங்கு அவன் வசந்தசேனையைக் கண்டு அவள் காலில் சரணமென்று விழுந்தான். அந்த அம்மணி என்னவென்று விசாரிக்கையில், தான் சபிகனுக்குப் பத்துப்பொன் கடன்கொடுக்க வேண்டுமென்றும் அவன் தன்னைத் துரத்துவதாகவும் சொன்னான். பணத்தால் பயம் என்று இந்த அம்மணிக்குத் தெரிந்தவுடன் "நீர் பயப்படவேண்டாம். அவர்களிங்கு வந்தால் உமது கடனை நான் தீர்த்துவிடுகிறேன்" என்று சொல்லி ஸம்வாககனுடைய பூர்வோத்தரத்தை அவள் விசாரித்தாள். அதற்கு அவன் தான் பெரிய மனிதர்கள் வீட்டில் கைகால் பிடிக்கிறவேலை செய்தவனென்றும் ஆரிய சாருதத்தனிடம் வெகு நாள் வேலையிலிருந்ததாகவும், அவனுக்குக் கொஞ்சம் கைகளைத்துவிடவே அவரை விட்டு இப்படிச் சூது முதலான கெட்ட தொழிலில் இறங்கினதாகவுஞ் சொன்னான். சாருதத்தனிடமிருந்தவனென்று வசந்தசேனைக்குத் தெரிந்தவுடன் அவள் ஸம்வாககனை ஒரு பெரிய ஆசனத்திலிருத்தி அவனுக்கு ஆசாரோபசாரம் செய்து மறுபடியும் தாங்கள் ஆரிய சாருதத்தனிடஞ் சென்று அவரிடம் இருக்கவேண்டும். அதால் தங்களுக்கு முன்னமே என்ன வந்துகொண்டிருந்ததோ அது இப்பொழுதும் என்னால் வரும் என்றாள். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலே அந்த சபிகனும் "அகப்பட்டான் கடன்காரன்" என்று வந்து சேர்ந்தான். எப்பொழுது ஸம்வாக-

கன் வசந்தசேனைவீடு சேர்ந்தான் என்றதை இவனறிந்து கொண்டானே அப்பொழுதே தனது பணமும் தன்னிடம் வந்ததாக நிச்சயித்து விட்டான். அந்தப்படியே வசந்தசேனை இவன் வரவைத் தூரநின்று பார்த்துத் தனது வேலைக்காரி ஒருத்தியைக் கூப்பிட்டு அவளிடம் தன் கைக்காப்பைக் கழற்றிக்கொடுத்துப் பத்துப்பொன் கடனுக்காக ஸம்வாககன் கொடுத்தானென்று சொல்லிக் கொடுத்து வா என்றனுப்பினாள். சபிகனுக்கு பத்துப் பொன்னுக்காக நகை வந்துவிடவே அவன் வெகு சந்தோஷமடைந்து கடன்தீர்ந்துவிட்டது. மறுபடி சூதாட வரலாமென்று ஸம்வாககனிடம் தெரிவி என்று சொல்லிவிட்டு சபிகன் போய்விட்டான். ஸம்வாககனும் சாருதத்தன் என்ற பெயரைச்சொன்னதினால் தனக்கு நடந்த மரியாதையைக்கண்டு ஆச்சரியப்பட்டு ஆகா! உலகத்தில் ஜன்மமெடுத்தாலிப்படியல்லவோ எடுக்கவேண்டும். அவர் பெயரைச்சொன்னமாத்திரத்தில் நமது கடனும் நீங்கி ராஜமரியாதை நடந்ததென்று சந்தோஷப்பட்டு வசந்தசேனையிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு உலகவாழ்க்கையில் வெறுப்புற்று பௌத்த சன்னியாசியாக மாறிவிட்டான். வசந்தசேனை இப்படி ஸம்வாககனை அனுப்பிவிட்டவுடன் கர்ணபூரகன் என்ற அவளுடைய யானைப்பாகன் அங்கு ஓடிவந்து அவளுடைய யானை ஒன்று அன்று கட்டை முறித்துக்கொண்டோடி ஒரு மனிதனைக் கொல்லத் தெரிந்ததாகவும், தான் வெகு தைரியமாக அதைப் போய் மடக்கி அது தன் துதிக்கையால் சுற்றித் தூக்கின மனிதனை விடுவித்து வந்ததாகவும், அப்படி விடுவித்து வரும் வேளையில் ஒரு மகா புருஷன் நன்றாய்ச்

உச்சயினி பட்டணத்திற்கு வெளியில் சாருதத்தனுக்கு ஒரு தோட்டமுண்டு. வசந்தசேனை தூங்கி எழுந்திருந்தவுடன் அவளைத்தன் வண்டியிலேற்றி அங்கு அழைத்துவர ஏற்பாடு செய்துவிட்டு விடிய ஒரு நாழிகைக்கெல்லா மெழுந்திருந்து சாருதத்தன் அங்கு போய் விட்டான். வசந்தசேனையும் காலமே எழுந்திருந்து சாருதத்தனை விசாரிக்கையில் அவன் தன்னை வண்டியில் வர ஏற்பாடு செய்துவிட்டு முன்னமே புறப்பட்டுத் தோட்டத்திற்குப் போனதாகத் தெரியவந்தது. அப்படியே செய்ய உத்தேசித்துத் தான் இன்னும் ஒரு நாழிகைக்குட் புறப்படுவதாகவும் வண்டி வரட்டும் என்று சொன்னாள். தான் நேற்று பெற்றுக்கொண்ட ரத்தின மாலையைச் சாருதத்தனிடம் காட்டி திருட்டுப்போன தனது நகைக்காக இப்படி நாலு சமுத்திரங்களையும் விலைக்கு வாங்கக்கூடிய ரத்தினவளியையனுப்பலாமா என்று சொல்லி நகைகளைத் திருடினவனையும் அவைகள் தன்னிடம் வந்து சேர்ந்த விதத்தையும் சொல்லியிருந்தாள். மறுநாள் காலமே தூதிகை என்ற சாருதத்தன் மனைவியிடம் சென்று அவளிடம் அந்த நகையைக் கொடுக்கவே அந்த அம்மணியும் அம்மா நீயே எனது புருஷனுடைய பிரியத்திற்குப் பாத்திரமாய் விட்டபடியால் இதைப் போட்டுக்கொள் என்று நகையை வசந்தசேனை கழுத்தில் அணிந்தாள். சூரியனும் உதயமாய் இரண்டு நாழிகையாய் விடவே சடுதியில் சாருதத்தனைத் தோட்டத்தில் பார்க்கவேண்டுமென்று தனது [illegible]ர்க்கை அலங்கரித்துக்கொள்ள உட்சென்றாள். [illegible]

சாருதத்தனுடைய வேலைக்காரி ரோஹசேனன் என்ற தனது எஜமானன் குழந்தையை இடுப்பிலெடுத்துக் கொண்டு அவன் கையில் மண்ணுற் செய்யப்பட்ட ஒரு வண்டியை “இதை வைத்துக்கொண்டு விளையாடப்பா என் குழந்தாய்” என்று சொல்லிக்கொண்டு வசந்தசேனை சிங்காரித்துக்கொண்டிருந்த இடம் வந்து சேர்ந்தாள். ரோஹசேனனும் தனது தகப்பனுர் போலக் கம்பீர வடிவுள்ளவனுக விருந்தபடியால் “யாரிந்தக் குழந்தை வா அப்பா” என்று அவனைத் தனது கைகளால் வாரி எடுத்து வசந்தசேனை முத்தமிட்டாள். இவன் நமது யஜமானருடைய மனோரதத்தின் பலம்; அவர் குமாரன் என்று சொல்லவே, வசந்தசேனை ரோஹசேனன் பேரில் தனது பிள்ளைபோல் அன்பு வைத்து மறுபடியும் எடுத்து மடியில் வைத்து உச்சிமுகர்ந்தாள். இப்படிச் செய்யும் ஸ்திரீயைக் கண்டு அக்குழந்தை வியப்புற்று தனது தாதியாகிய ரதனிகையைப் பார்த்து “யாரிவள் ரதனிகே” என்று கேட்கவே, அதற்கு அவளும் மரியாதையாகவே “இவளும் உன் அம்மா, குழந்தாய்”என்ருள். அதற்கு ரோஹசேனனும் ரதனிகையைப் பார்த்து “இல்லை இல்லை. நீ பொய் சொல்லுகிருய். எனக்குத் தெரியாதோ. நம்மம்மாவுக்கு இத்தனை நகை எது சொல்லடி” என்ருன். இதைக்கேட்டு வசந்தசேனை ஆ! ஆ! தெய்வமே! பணத்தில் படுத்துறங்கின சாருதத்த மகாராஜன் குழந்தை கூட “அம்மாவுக்கு இவ்வளவு நகை ஏதடி” என்று கேட்கும்படியாய் வந்ததே என்று பரிதபித்தாள். இப்படி இவள் தவிக்கையில் [illegible] கயும் அழக்கண்டு [illegible] று ரதனிகையை

0-,2111NS

வசந்தசேனை கேட்க அதற்கு அவள் " அடுத்த அகத்துப் பையன் ஒரு தங்க வண்டி வைத்து விளையாடுகிறான். அந்த மாதிரி வண்டி கொண்டுவா என்றால் நான் எங்கு போவேன். மண்ணால் அந்த மாதிரி ஒரு வண்டி (மிருச்சகடி) பண்ணிக்கொடுத்தேன். அதை வாங்க மாட்டேனென்கிறான் இவன் " என்றாள். இதைக்கேட்டதும் வசந்தசேனை " சாருதத்தன் அருமை மகன் (மிருச்சகடி) மண்வண்டியைக் கொண்டுதானா விளையாடவேண்டும். பாழுந்தெய்வமே! மனிதனுடைய அதிர்ஷ்டத்தைத் தாமரையிலை நடுவில்விழுந்த நீர்த்துளியாகப்பண்ணி விளையாடுகிறாயே யல்லாமல் ஸ்திரமான சம்பத்தை ஒருவருக்கும் கொடுத்தாயில்லையே" என்று துக்கப்பட்டாள். பிறகு தனது நகைகளை எல்லாம் கழற்றி மிருச்சகடியில் மாட்டி " என் கண்மணியே, உன் மண்வண்டி இப்பொழுது தங்க வண்டியாய்ப் போய்விட்டது. உன்னிஷ்டப்படி விளையாடு " என்று சொன்னாள். சாருதத்தனுக்கு இப்படிப் பட்ட கதி வந்ததே என்று நினைக்க இவள் கண்களிலிருந்து நீர் வடிந்துகொண்டேயிருந்தது. அதை ரோஹசேனன் பார்த்து " நீ அழுதுகொண்டே உன் நகையை ஏன் மிருச்சகடியில் போடுகிறாய். எனக்கு வேண்டாம் போ " என்றான். இப்படிக் குழந்தை சொன்னதைக் கண்டு மிகவும் வியப்புற்று " இல்லை நானழவில்லை" என்று சொல்லி தன் முந்தாணியால் கண்களைத் துடைத்துக் கொண்டு நகைகளை வண்டியில் வசந்தசேனை பூட்டினாள். குழந்தையும் எனக்கும் தங்கவண்டி [illegible] கொண்டு விளையாடச் சென்றது.

இதற்குள் சாருதத்தன் மாட்டுவண்டியும் வாசலில்

தமிழ்நாடு [illegible] நூலக
123854

வந்து நின்றது. வண்டிக்காரனும் தான் தயாராக விருப்ப தாகச் சொல்லி அனுப்பினன். அதற்கு வசந்தசேனை அரைநாழிகைக்குள் தான் வருவதாகவும் அதுவரையில் காத்திருக்கட்டும் என்றும் கட்டளையிட்டாள். பெண்டு கள் போகிற வண்டியாதலால் நன்ருய் நாலுபக்கங்களி லும் மூடப்பட்டிருந்தது. வண்டிக்காரன் கதவைத் திறந்து பார்க்கவே அதில் ரத்தின கம்ளபத்தைக் காணும். ஓகோ நாம் புறப்படும் அவசரத்தில் வண் டிக்கு விரிப்புப் போடாமல் வந்து விட்டோம். யஜமானி அரைநாழிகை காத்திருக்கச் சொல்லியிருக்கிருளே இதற் குள் விரிப்பை எடுத்து வருவோம் என்று வண்டியுடன் காடிகானுவுக்குச் சென்றுன்.

இந்த சங்கதி இப்படியிருக்க சகாரன் மூடுவண்டி ஒன்று அந்த ரஸ்தா வழியாய்ப் போய்க்கொண்டிருந்தது. சாருதத்தன் வாசல்முன் வந்ததும் அப்புறம் அது போகக்கூடாமல் முன் ரஸ்தாவில் அநேக வண்டிகள் குடை கவிழ்ந்திருந்தன. அந்த வண்டிக்காரர்களும் சகாரன் வண்டிக்காரனைக் கொஞ்சம் தங்கள் வண்டிகளை ஒரு கைகொடுத்து எழுப்பிவிடும்படி கேட்டுக்கொண்டார் கள். அவனும் அப்படியே செய்ய உத்தேசித்துச் சாரு தத்தன் வாசல்முன் தன் வண்டியை நிறுத்திவிட்டுக் குடைகவிழ்ந்த வண்டிகள் சக்கரங்களைப் புரட்டப் போனன். இவன் போனதும் வசந்தசேனை வெளியில் வந்து வாசலில் நிற்கும் வண்டியில் தன்வண்டி என்று ஏறிக் கதவைச் சாத்திக்கொண்டாள். முன் வண்டி குடை கவிழ்ந்திருந்ததும் வண்டிக்காரர்களெல்லாம் அங்கு குடை எடுத்துவிட்டுக் கொண்டிருந்ததையுங்

கண்டு தன் வண்டிக்காரனுமங்கிருந்ததாக எண்ணி விட்டாள். முன்வழி சரியானவுடனே சகாரன் வண்டிக்காரன் தன் வண்டியை தனது யஜமானன் பட்டணத்திற்கு வெளியிருந்த தோட்டத்திற்கு ஓட்டிக்கொண்டு போனுன். ஐயோ! அந்த வண்டியிற்றான் வசந்தசேனையும் உட்கார்ந்துகொண்டு தனது அன்பனுகிய சாருதத்தனைப் பார்க்கப்போவதாக உத்தேசித்துப் போனது. வண்டி நகரும்பொழுதே இவள் வலதுகண் துடித்தது. "ஐயோ! வலதுகண் துடிக்கிறதே என்ன கஷ்டம். நமக்கோ அல்லது நமது அன்பருக்கோ தெரியவில்லையே. எல்லாக் கஷ்டமும் அவருடைய முகத்தைப் பார்த்தால் தீரும்" என்று எண்ணி மனதைத் தேற்றிக்கொண்டாள்.

இப்படி இந்த சகாரன் வண்டி போனவுடன் ஒரு பெரிய கலகலசப்தமுண்டாயிற்று. பாலகன் என்ற கொடுங்கோன் மன்னன் அப்பொழுது அரசனென்பது எல்லாருக்கும் தெரியுமல்லவா. அவன் இராச்சியம் கொஞ்சநாள் தான் என்றும், இடைச்சேரியிலிருந்து ஆரியகனென்ற ஒரு மகாபுருஷன் சீக்கிரம் அரசாளப்போகிருன் என்றும் ஒரு சித்த புருஷன் சொல்லியிருந்தான். இதைப் பாலகனறிந்து ஆரியகனைப் பலாத்காரமாகப் பிடித்து கைகால்களில் விலங்குபோட்டு கொட்டடியில் வைத்தான். ஆரியகன் கக்ஷியில் அநேகம் பேர் சுபாவமாகவே சேர்ந்திருந்தார்கள். ஆரியகனும் வசந்தசேனை சகாரன் வண்டியில் தப்பி ஏறிப்போன அன்று காலமே தன் விலங்குகளை முறித்துக்கொண்டு கொட்டடியை விட்டு வெளிக்கிளம்பிவிட்டான். இவன் ஓடிவிட்டான்

என்ற சமாசாரம் இராசனுகிய பாலகனுக்கு தெரியவதந்த வுடன் ஊர்முழுவதும் தன் சேவகர்களை யனுப்பி எப்படி யாவது ஆரியகனைப் பிடித்து வரும்படி உத்திரவிட்டான்.

விலங்கு முறித்துக்கொண்டு ஓடிவிட்ட ஆரியகனும் காலில் சங்கிலி கலகல என்று இழுத்துக்கொண்டுவர கட்டுத்தறித்து வோடும் மதயானைபோல ஓடத் தலைப்பட்டான். இப்படி இவன் தப்புவதற்கு உதவி செய்தவன் சாருதத்தன் வீட்டில் கன்னம் வைத்த பிராமணனுகிய சர்பிலகனே. இவன் ஆரியகன் கக்ஷியைச் சேர்ந்தவனென்று நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம்.

"பாலகனுக்குப்பிறகு நான் ராஜாவாக வேண்டுமென்பது என் தலையிலெழுதியிருந்தால் அதற்கு நான் என்ன செய்வேன். என்பேரில் என்ன குற்றம்; நடக்க வேண்டியது நடந்தே தீரும்" என்று நினைத்துக்கொண்டு ஆரியகன் ஓடும்பொழுது சாருதத்தன் வீடு திறந்திருக்கக்கண்டு "இது யார் வீடோ தெரியவில்லை தெய்வாதீனமாகத் திறந்திருக்கிறது. கிலற்றுக் கதவற்றுக் கிடக்கிறது. நம்மைப்போல் துர்ப்பாக்கியமுள்ள ஒருவனுடைய வீடாயிருக்கவேண்டும்" என்று எண்ணி உட்சென்றான்.

இவன் உட்சென்ற அரை நிமிஷத்திற்கெல்லாம் விரிப்பெடுக்கப்போன வண்டிக்காரன் சாருதத்தனிருந்த தோட்டத்திற்கு வசந்தசேனையை அழைத்துப் போக வாசலில் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தி வண்டி தயாராக இருக்கிறது என்று சத்த மிட்டான். ஊருக்கு வெளியில் பெண்களை அழைத்துப்போக மூடு வண்டி வாசலில் வந்து சேரவே, அதை ஆரியகன் உள்

ளிருந்து பார்த்து "நமது அதிர்ஷ்டந்தானிது. இதிலேறி உட்காருவோம். நம்மை இது வெளியில் கொண்டுபோகும். நாம் தப்பி விடுவோம்," என்று நினைத்துச் சரேலென்று அவ்வண்டியிலேறிக்கொண்டான். இவன் கால் விலங்கும் கல் கல் என்று சத்தஞ்செய்தபடியால் பாதசலங்கையணிந்த நமது யஜமானிதான் வண்டியிலேறினுள் என்று நினைத்து ஹை ஹை என்று வண்டிக்காரன் வண்டியை சாருதத்தன் தோட்டத்திற்கு ஓட்டிக்கொண்டு போனுன்.

ஆரியகன் கொட்டடியை விட்டு வெளிக்கிளம்பிவிடவே ஆள்போய்விட்டான் என்று ஊரெல்லா மல்லோலகல்லோலப்பட்டிருந்ததாக முன்னமே சொன்னோமே. சாருதத்தன் வண்டிபோகும் ரஸ்தாவில் சந்தனகன், வீரகன் என்ற இரண்டு சேவகர்கள் தப்பிப்போன கைதியைப் பிடிப்பதற்காக அங்குமிங்கும் சுற்றிக்கொண்டிருந்தார்கள். மூடுவண்டிவர அவர்கள் கண்டதும் "யாருடையது வண்டி எங்கு போகிறது யார் ஏறிக்கொண்டு போகிறுர்கள் நிறுத்து பார்ப்போம்" என்றுர்கள். உடனே வண்டிக்காரன் "சாருதத்த மகானுபாவருடைய வண்டி அவர் தோட்டத்திற்குப் போகிறது. வசந்தசேனை ஏறிப்போகிறுள்" எனவே, அதற்கு சந்தனகன் அப்படியா அந்த மகாபுருஷனுடைய வண்டியானுல் நாம் பரிசோதிக்கவே வேண்டாம். அது போகட்டும். அந்த குணம் என்ற தாமரைப்பூவை நன்னடத்தை என்ற சந்திரகலையை யார் தானறியமாட்டார்கள் போகட்டும் என்றுன். அதற்கு வீரகன் கூடாது நான் பரிசோதித்துத்தான் விடுவேன். யாராயிருந்தாலும் ராஜகாரியமாதலால் வண்டியைப் பரி

சோதித்துத்தான்விட வேண்டும் என்றான். உடனே பரிசோதிப்பதற்காக சந்தனகன் வண்டியிலேற வீரகன் வண்டி நுகத்தடியைத் தூக்கிக்கொண்டான். சந்தனகன் வண்டிக்குள் வந்ததும் ஆரியகன் அவன் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு இந்த சமயத்தில் எனக்கு உயிர்பிச்சை கொடுத்துக் ஆதரித்தால் நான் பிறகு அரசனுல் உன்னை மறக்கமாட்டேன் என்றான். உடனே சந்தனகன் மிகவும் நல்ல குணமுள்ளவனுகையால் அப்படியே அபயங்கொடுத்து வண்டியை விட்டுக் கீழே இறங்கி "பார்த்தேன் அவனை, இல்லை அவளை, போகட்டும் வண்டி" என்று சந்தனகன் பதறிச் சொன்னான். இதை வீரகன் கேட்டு "பார்த்தேன் அவனை, இல்லை அவளை" என்று நீ சொன்னதில் எனக்கு ஏதோ சந்தேகம் தோன்றுகிறது. நானும் பார்க்கவேண்டும் என்றான். "அப்படியானல் நான் பார்த்ததில் உனக்கு அவ்வளவு அவநம்பிக்கையா" என்று சந்தனகன் கேட்க, "இல்லை அவனை, இல்லை அவளை" என்று நீ சொன்னபடியால் எனக்கு உன் பேச்சில் நம்பிக்கையில்லை. நானும் வண்டியைப் பரிசோதிக்கத்தான் வேண்டுமென்று வீரகன் சொல்ல இவ்விருவர்களுக்கும் சண்டையுண்டாய் விட்டது. "நான் பார்த்த வண்டியை நீ மறுபடி பார்க்க உனக்கென்ன அவ்வளவு அதிகாரம்" என்று சந்தனகன் வீரகனைப்பார்த்துச் சொல்ல இவ்விருவர்களுக்கும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பேச்சு முற்றி சண்டையுண்டாய் விட்டது. அச்சண்டையில் வீரகன் நன்ருயடிபட்டு, சந்தனகன் செய்த அநியாயத்தை அரசனிடம் முறையிடச் சென்றான். உடனே சந்

தனகனும் தனது பட்டாக்கத்தியை உருவி சாருதத்தன் வண்டியிலிருந்த ஆரியகனிடம் அடையாளமாகக் கொடுத்து இனி யாராவது இவ்வண்டியைச் சோதிக்க வந்தால் முன்னமே சந்தனகன் சோதித்திருக்கிறன். அதற்கடையாள மிந்தக்கத்தி என்று காட்டி வண்டியை ஓட்டிப் போகச் சொன்னுன். ஆரியகனும் சந்தனகன் நமக்கு பூர்வ சன்மத்தில் பந்து. நமக்கு கையில் ஒரு ஆயுதத்தையுங் கொடுத்தான். நற்சகுனமாக நமது வலது கண்ணுங் துடிக்கிறது. நமது கக்ஷியில் ஈசுவரனிருக்கிறர் என்று நினைத்துக்கொண்டே போனுன். வண்டிக்காரனுக்கு மட்டில் வசந்தசேனையே தான் வண்டிக்குள் போவதாக எண்ணம்.

சந்தனகனும் இனி நாமிங்கிருப்பதில் பயனில்லை. ஊர்காவல் வீரகனை நாம் பகைத்துக்கொண்டு விட்டோம். என்ன சமயத்தில் என்ன வருமோ என்று பயந்து தனது பெண்சாதி பிள்ளைகள் சகிதம் ஆரியகன் கக்ஷியைக் கைபற்றிச் சர்பிலகனிடம் போய்ச் சேர்ந்தான்.

பட்டணத்திற்கு வெளியில் தனது தோட்டத்தில் எப்பொழுது வசந்தசேனை வரப்போகிறுள், ஏனிவ்வளவு தாமதம் என்று சாருதத்தன் தனது ஒரே தோழனுகிய மைத்திரேயனிடம் பேசிப்பேசி விசாரப்பட்டுக்கொண்டிருந்தான். அத்தோட்டத்தின் மாங்கள் எல்லாம் வியாபாரிகள் போலவும், அதில் பூத்திருந்த புஷ்பங்கள் வியாபாரச் சரக்குகள் போலவும், அவைகளின் தேனை உண்டு போகும் வண்டுகள் சரக்கு பிடித்துக்கொண்டு போகும் வியாபாரிகள் போலவும் தென்பட்டன. "ஏன் நமது வண்டி வரவில்லை மைத்திரேயா! நடுவில் அச்சு ஒருகால்

முறிந்திருக்குமோ மாட்டுக் கயிறு ஒருகால்போயிற்றோ அல்லது வழிதப்பி மயங்குகிறனோ வண்டிக்காரன்" என்று விசாரப்படுகையிலேயே வண்டி ஓசையும் கேட்டது. உடனே திரும்பிப்பார்க்கத் தன் வண்டியாக விருக்கக் கண்டு அதிலிருக்கும் வசந்தசேனையைப்பார்க்க இருவரும் சென்றார்கள்.

வண்டி தோட்டத்திற்குள் நுழைந்ததும் "நல்லது நாம் இதுவரையில் வந்தோமே இப்பொழுது குதித்து ஓடிவிடுவோமா அல்லது அந்த மகானுபாவன் சாருதத்தனைப் பார்த்துவிட்டே போவோமா" என்று ஆரியகன் ஆலோசிக்கையிலேயே அங்கு சாருதத்தன் வந்து சேர்ந்தான். அந்த மகா புருஷனைக் கண்டு ஆரியகன் கண் கூச்சுண்டு காலில் விழுந்து நடந்ததை நடந்தபடி சொன்னான். அவைகளை எல்லாங்கேட்டு சாருதத்தன் சந்தோஷப்பட்டு ஆரியகன் கால்விலங்குகளைத் தறித்துப் பாழுங் கிணற்றிற்போட்டு அவனைத் தனது வண்டியிலேயே அவனிருப்பிடம் போய்ச்சேர அனுப்பினான். ஆரியகனும் இந்த உபகாரத்தை நான் ஒருபொழுதும் மறக்கேன் என்று சொல்லி சாருதத்தனிடம் விடை பெற்று அவன் வண்டியிலேயே சர்பிலகன் முதலான தனது கக்ஷிக்காரர்கள் சேர்ந்திருக்குமிடம் போய்ச் சேர்ந்தான்.

அவன் போன பிறகு நமது வண்டியில் ஆரியகனேறி வந்தானே, வசந்தசேனை கதி என்னமாயிற்றோ என்று யோசிக்கையிலேயே தனது இடதுகண் துடிக்கக் கண்டு அச்சமுற்று "மைத்திரேயா வா, சீக்கிரம் வீடு போவோம். வசந்தசேனையைப் பாராத என் மனம் பதைக்

கிறது " என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டு புறப்படுகையிலேயே ஒரு பௌத்த சன்னியாசி எதிர் வரக்கண்டு "ஐயோ! இந்த அபசகுனமும் வேண்டுமா வசந்தசேனை என்ன மானுளோ " என்று விரைக்க வீட்டைப்பார்க்க சாருதத்தன் திரும்பிவிட்டான்.

வீடு வந்ததும் வசந்தசேனை தன் நகைகளைக் கழற்றி ரோஹசேனன் விளையாட்டுக்காக அவன் வண்டியிற் போட்டுவிட்டு வீட்டிற்கோ அல்லது தோட்டத்திற்கோ வண்டி ஏறிக்கொண்டுபோனுள் என்று தெரியவந்தது. உடனே அவள் நகைகளை எல்லாம் எடுத்து மைத்திரேயனிடங் கொடுத்து " அப்பா, இந்த ஆபரணங்களை யவளிடம் சேர்ப்பித்து அவள் க்ஷேமத்தை அறிந்து வா " என்று அனுப்பினுன். அவனும் சீக்கிரம் போவதாக நகைகளை வாங்கிக்கொண்டான்.

சகாரன் மகா கொடிய பாவி என்றும் வசந்தசேனையை அநேகந்தடவை சுற்றித் தொடர்ந்திருக்கிருன் என்றும் நாம் முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா. அந்த வசந்தசேனையே தனது விதிவசத்தால் தெரியாத்தனமாக சாருதத்தன் வண்டி என்று சகாரன் வண்டியிலேறிக்கொண்டு போனதையும் நாம் முன்னமே சொன்னுேமே. அந்த வண்டியோ சகாரனை வீட்டிற்கு அழைத்து வரப்போன வண்டி. வெகு நாழியாயும் வண்டி வாராமலிருந்தது. துஷ்டர்களுக்கு எப்பொழுதும் கெட்ட செய்கையிலேயே ருசியாதலால் அங்கு ஸ்நானம் பண்ணவந்த ஒரு பௌத்த சன்னியாசியைப் பிடித்துக்கொண்டு சகாரன் தொந்தரை செய்யத் தலைப் பட்டான். வீடு வாசலற்றுக் காய் கிழங்கு இலைகளைப்

புசித்துக்கொண்டு திரியும் சன்னியாசிகளை உபத்திரவித்தால் யாருக்குத்தான் மனம் பதைக்காது. சகாரன் அந்த பௌத்த சன்னியாசியைச் செய்யாத உபத்திரவமெல்லாஞ்செய்து வந்தான். நீ பிறந்தபொழுதே சன்னியாசியாக ஏன் பிறக்கவில்லை என்று இந்தத் துஷ்டாத்மா அந்த மகாத்மாவைப் பீடிக்கத்தலைப்பட்டான். இவைகளை எல்லாம் சகாரன் கிட்டவிருந்த விடன் கண்டு நல்லவார்த்தை சொல்லி மெதுவாய் அவனைத் தப்பிக்கச்செய்தான்.

சன்னியாசி தப்பி ஓடினதும் வண்டி வந்தது. "ஏன் இத்தனை நாழிகை தாமதித்தாய்" என்ற சகாரனுடைய குரல் வசந்தசேனை காதில் விழவே, அவள் நடுநடுங்கி ஓ! ஓ! காரியம் மோசமாயல்லவோ முடிந்தது. என்ன செய்யப் போகிறேன் ஈசுவரா" என்று குற்றுயிராய்ப் போய்விட்டாள். உடனே வண்டியிலேற விடன் வந்து அதில் வசந்தசேனை யிருக்கக்கண்டு என்ன விபரீதம். வெளுத்த மணற்குன்றுகளில் தெளிந்த நதிக்கரையில் விளையாடிக்கொண்டிருக்கும் அன்ன புருஷனை அன்னப் பெண் விட்டு காக்கையை நாடுவளா என்று அச்சமுற்றான். அதற்கு வசந்தசேனை விடன் காலைப் பற்றிக்கொண்டு "என்பேரில் சந்தேகம் வேண்டாம். வண்டி தப்பி ஏறி வந்து சேர்ந்தேன். என்னை ரக்ஷித்தருளும்" என்றாள். அப்படியே ரக்ஷிப்பதாக ஒப்புக்கொண்டு விடன் வண்டியிலிருந்து கீழே குதித்து அடா யப்பா; ஒரு பெரிய பிசாசு இங்கே யிருக்கிறது என்றான். பிசாசாயிருந்தால் உன்னை எப்படி விட்டது பார்ப்போமென்று சகாரனும் வண்டி பண்டை வந்து பார்த்து வசந்தசேனையாக விருக்கக் கண்டு அவளைத்தன் வண்டியில் உட்காராதே இறங்கு

கீழே என்றான். அவளும் கீழ்வந்து ஒரு மரத்தடியில் போய் மயங்கி நின்றாள். அநேக விதமாய் அவள் மனதைக் கவர சகாரன் சொல்லிப்பார்த்தான். அவளோ சாதியில் வேசியாயிருந்தும் குணத்தில் குலப்பெண்ணுக்கு மேலென்று சொல்லியிருக்கிறோமே. சகாரன் பேசும் பேச்செல்லாம் அவள் கோபத்திற்கு நெய்விட்டாற் போலாயிற்று. சகாரன் அவள் காலில் விழுந்தும் பார்த்தான். அதற்கு அவள் தனது இடது காலால் அவன் தலையிலுதைத்தாளேயன்றிக் கொஞ்ச மேனு மிணங்கவில்லை. தலையில் உதை விழவே சகாரனுக்குக் கோபம் பொறுக்கக் கூடவில்லை. " ஒரு நாளும் ஒரு தெய்வத்தைக்கூட நோக்கி வணங்காத தலை இன்று உன்னை வணங்கினால் நீ உதைக்கிறமட்டு மாயிற்று பார் உன்னைக்கொன்றுவிடுகிறேன் " என்றான். உடனே விடனைப்பார்த்துச் சகாரன் நீ இவளைக் கொன்றுவிடு உனக்கு அநேகம்பொன் தருகிறேன் எனவே, அதற்கு அவன் இந்த நகரத்துக்கு அலங்காரமாக விளங்கும் இப்பெண்மணியை வதைத்துவிட்டு நான் பரலோகம் என்ற நதியை எந்தத்தெப்பத்தைக் கொண்டு கடப்பேனென, அதற்குச் சகாரன் நான் நூறு தெப்பம் பண்ணித் தருகிறேன். ஒருவரும்உன்னைப் பார்க்கமாட்டார்கள் கொல் என்றான். விடன்" அடா மூடா, பத்து திசைகளும் நம்மைப் பார்க்கின்றனவே, வனதேவதைகளும் சந்திர சூரியர்களும் ஆகாசமும் பூமியும் நம்மைப் பார்க்கின்றனவே " என்று சொல்லி நாம் அருகாமையிலிருப்பதால் வசந்தசேனை இவனுக்குப் பிடிப்புக் கொடுத்துப் பேசாமலிருக்கிறாளோ என்னமோ என்று மறைந்தான்.

சகாரன் கொண்ட கருத்தோ நிசமான கெட்ட கருத்து. குற்றமற்ற அப்பெண்மணியைக் கழுத்தைப் பிசைந்து கொன்றுவிட்டான் என்கலாம். இப்படி இவன் செய்த கொலையைத் தூரத்திலிருந்து பார்த்த விடன் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு இனி இந்தப் பாபத்தை நான் எங்குபோய்ப் போக்குவேன், இந்தத் துஷ்டனுடைய சகவாசம் போதுமென்று விடன் சர்பிலகனிடம் ஓடிவிட்டான். அவன் ஓடிவிடவே தனது சேடன் ஒருவன் மாத்திரம் தான் செய்த காரியத்துக்குச் சாட்சியாகையால் சகாரன் அவனைத் தனது வீடுகொண்டு போய் மாடிபின்பேரில் இருப்புச் சங்கிலி போட்டுத் தூணிற் கட்டிவிட்டான்.

தோட்டத்தில் வசந்தசேனையைச் சகாரன் கொன்று அவளை அங்கிருந்த குளக்கரையருகிற் போட்டு மேலே சருகைத்தூவி வீடுபோய்ச் சேர்ந்தான். நல்லது இவளைத்தான் கொன்றாய்விட்டது. இனி நாம் செய்யவேண்டியதென்னவெனில் இவள் நாயகனைக் கொண்டாடிவந்த சாருதத்தனை நாசஞ் செய்யவேண்டும். அது எப்படியாகுமென்றால் இவள் நகைக்காக ஆசைப்பட்டு அவனே இவளைக் கொன்றதாகப் பொய்ப்பிராது செய்து விசாரணைக்குக் கொண்டு வந்துவிடுவோம், தரித்திரன் தலைமேல் என்னவித குற்றஞ் சுமத்தினாற்றான் செல்லாது என்று நினைத்து அந்தப்படி என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளுக்குத் தக்க ஏற்பாடு செய்தான். இந்த சகாரன் வெகு துஷ்டன். நல்ல சங்கதிகள் இவனுக்கு ஒன்றுந் தெரியாவிடினும் சூது, வாது, பொய்ப் பிராது இவைகளில் சமர்த்தன்.

முன்னமே நாம் ஸம்வாககன் என்ற ஒரு தூதனை வசந்தசேனை அவன் பட்ட பத்துப் பொன் கடனுக்காகத் தன் நகையைக் கழற்றிக்கொடுத்து விடுவித்தாள் என்றும், அன்று முதல் அவன் பௌத்த சன்னியாசியாகப் போய்விட்டானென்றும் சொல்லியிருக்கிறோமல்லவா. வசந்தசேனை வருமுன் அந்தத் தோட்டத்திற்கு வந்து சகாரன் கையிற் சிக்கிக்கொண்டு அவதிப்பட்டவன் அந்தச் சன்னியாசியே. பிறகு அடுத்த தோட்டத்திற் போய் ஸ்நானம் செய்துவிட்டு எங்கேயாவது சாருகள் குவிந்திருந்தாலங்கு தன் காஷாய வஸ்திரத்தைக் காயப் போடுவோம் என்று சகாரன் முதலானவர்கள் போய் விட்டபடியால் மறுபடி யங்கு வந்தான். அவ்விடம் குளக்கரை யருகாமையில் குவிக்கப்பட்டிருந்த சாகில் தன் வஸ்திரத்தைப் பிரித்துப்போட்டான். அதே சாகின் கீழ்தான் வசந்தசேனையும் குற்றுயிராய் கிடந்தாள். ஈரவேஷ்டி தன்பேரில் போட்டிருந்த சாகின்மேல் விழவே அந்த ஈரம் அவள் பேரிலும் கொஞ்சம் பட்டு உணர்ச்சியை உண்டாக்கிற்று. சகாரன் என்னதான் மென்னியைப் பிடித்தும் இவள் சாருதத்தன்பேரில் வைத்திருந்த வாஞ்சையால் முற்றிலும் சாகவில்லை. ஈர உணர்ச்சி தேகத்தில் பட்டவுடனே அவள் தனது கையைத் தூக்கினாள். குளக்கரையில் உட்கார்ந்திருந்த சன்னியாசியும் பெண்பால் கையொன்று கிளம்பக்கண்டு வியப்புற்று அருகாமையில் வந்து பார்க்க முன்னம் தனக்கு உபகாரஞ் செய்த வசந்தசேனையா யிருக்கக்கண்டு கண்ணீர் வடித்துத் தங்களுக்கு ஏன் இப்படிப்பட்ட கதி வந்ததென்று கேட்க அதற்கு அவள் பதில் சொல்ல நாவெழாமல்

கட்டைவிரலைச் சுட்டி வாயைக் காட்டித் தீர்த்தங் கேட்டாள். சமீபமிருந்த குளத்திற்குப் போய்த் தீர்த்தங் கொண்டு வருமளவுங்கூட அவள் தாகம் தாங்காதென்பதை யுணர்ந்து தனது வஸ்திரத்திலிருந்த சலத்தை அவள் வாயிலும் முகத்திலும் பிழிய அவள் எழுந்திருந்து உட்கார்ந்தாள். பிறகு தனக்கு வந்த கதியைச் சுருக்கமாகச் சன்னியாசியிடஞ் சொல்லி சீக்கிரம் நான் களைதீரும்படியான விடத்தில் என்னைக் கொண்டுபோ என்று சொல்ல அதற்கு அவனும் அப்படியே தனது தங்கையொருவள் தாபசியாயிருந்த அடுத்த மடத்தில் வசந்தசேனையைக் கொண்டுபோய் விட்டான்.

சாருதத்தன் தான் காலமே எழுந்திருந்து வசந்தசேனையை யழைத்து வரும்படி வண்டியையும் வண்டிக்காரனையும் வீட்டில் விட்டுவிட்டுத் தான் முன்னமே பட்டணத்திற்கு வெளியிலிருந்த தோட்டத்திற்குச் சென்ருன். அந்த வண்டியின் மூலமாக ஆரியகன் தப்பிச் சாருதத்தன் தோட்டம் வரவே அவன் விலங்குகளை முறித்து அதே வண்டியில் அவனூருக்கு அவனை சாருதத்தன் அனுப்பிவிட்டு வசந்தசேனை என்னமாணுளோ என்று வீடுவந்து சேர்ந்தான்.

வசந்தசேனையோ சகாரன் வண்டியில் மாறுபாடாக ஏறிக்கொண்டு தெரியாத்தனமாக சகாரன் தோட்டத்திற்குச் சென்று அவனால் கொல்லப்பட்டாள். பிறகு அவள் ஸம்வாககனுடைய உதவியாற் பிழைத்து அவன் தங்கை தாபசியாயிருந்தவளிடம் போய் கொஞ்சங்களைப்பு தீர உட்கார்ந்தாள் என்பதாகவும் முன்னமே சொல்லியிருக்கிறோம். ஆனால் இப்படி இவள் பிழைத்தது சகாரனுக்

குத் தெரியாது. அவள் முற்றிலும் இறந்தாள் என்றே எண்ணி அவளைச் சாருதத்தன் கொன்றதாகப் பொய்ப் பிராது செய்ய உத்தேசித்துக்கொண்டு சகாரன் உடனே நியாயசபைமுன் வந்து தோன்றினான்.

இவனைக்கண்டால் எல்லாருக்கும் பயமென்று முன்னமே சொல்லியிருக்கிறோமே. இவன் அங்கு வந்ததும் ஆசனங்களெல்லாம் சரியாய்ப் போடப்பட்டு நியாயாதிகாரி, செட்டிகள், குமாஸ்தா (காரியஸ்தன்) முதலான உத்தியோகஸ்தர்கள் வந்து கூடுங்காலமாக விருந்தது. நியாயாதிகாரி தான் வந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார். அவருடைய தீர்ப்புகளை எழுத அவருடைய வலதுபக்கத்தில் குமாஸ்தாவும் அவர்களுடைய தீர்ப்புகளைச் சீர்தூக்கிப்பார்க்க இடதுபக்கத்தில் செட்டிகளும் உட்கார்ந்தார்கள்.

இப்படி இவர்கள் உட்கார்ந்ததும் வாசலிலிருந்து ஒரு சேவகன் வந்து "தர்மப்பிரபுக்களே, சகாரன் என்ற நமது அரசனுடைய மைத்துனர் ஏதோ ஒரு பிராது கொண்டுவந்திருக்கிறதாகத் தெருவிக்கச் சொன்னார்" என்றான். ஆகா! சகாரனா! ஐயோ, அவன் பாபியாயிற்றே. இன்று வெகு சாக்கிரதையாய் நியாயத்தை நான் சோதிக்கவேண்டியிருக்கும், செட்டி யவர்களே, தீர்க்காலோசனை பண்ணவேண்டும் என்று நியாயாதிபதி தன்னைச்சுற்றி இருந்தவர்களை எச்சரித்துவிட்டு சகாரனைப் பிராது கொண்டுவரலாம் என்று உத்திரவு பண்ணினான். அப்படியே ஆகட்டும் தர்மப்பிரபுவே என்று சொல்லி வேலைக்காரன் வெளியிற் சென்றான். அதற்குள் நியாயாதிபதியானவன், நியாயமென்றும்

அநியாயமென்றும் கண்டுபிடிக்குஞ் சிரமத்தைப் பற்றிப் பின்வருமாறு மனதிற்குள் யோசிக்கலானுன்:— கட்சிப்பிரதிகட்சிகள் வியவகாரத்திற்கு நியாய ஸ்தலத்தில் வந்து நின்று வாதிக்கையில் இன்னுர் சொல்வது நியாயம் இன்னுர் சொல்வது அநியாயமென்று அறிவது மிகவும் கஷ்டம். ஒருவன் மற்ருெருவன்பேரில் ஒரு குற்றத்தைச் சாற்றலாம். அப்படிச் சாற்றப்பட்ட குற்றம் நிஜம் என்று நிச்சயமானுற்கூட யார் குற்றஞ்சாட்டப்பட்டானே அவன் குற்றத்தை இலேசில் ஒப்புக்கொள்ளுகிருனே? அவனுடைய சிநேகிதர்கள் அவன் குற்றத்தை மறைத்து வாதாடுகிருர்கள். அவனுடைய சத்துருக்கள் அவன் குற்றத்தை அதிகரித்தே பேசுகிருர்கள். நாம்தான் நமது காதில் நேரில் ஒருவிதமாக ஒரு சமாசாரத்தைக்கேட்டும் அதை சரி என்று எப்படி நம்பக்கூடும்.

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்ருே டுனையாத் தெரிந்ததும்—குற்றம்
அரிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று.

ஒருவனைத் தூஷிப்பது மிகவும் எளிது. அப்படிச் செய்யப்பட்ட தூஷணை உண்மைதானு என்று கண்டுபிடிப்பது மிகவும் அரிது. அப்படி நாம் செய்யப் பிசகினுல் உலக நிந்தை நமது தலையில் வருவது நிச்சயம். நியாயஸ்தலத்தில் வந்து உட்காரும் நியாயாதிபதி, படித்தவனுகமட்டு மிருந்தாற் போதாது. அமரிக்கையுள்ளவனுகவும், கோபம் என்பதே இல்லாதவனுகவும், சமபுத்தியுள்ள தார்மிஷ்டனுகவும் இருக்கவேண்டும். தீர்ப்பைச்

செம்மையாய் ஆலோசித்துச் சொல்லுகிறவனாக இருக்க வேண்டும். பலமற்றவர்களுக்கு ஒரு பிடிப்பாகவும், துஷ்டர்களுக்கு ஒரு சர்ப்பமாகவுமிருக்கவேண்டும். உண்மை, நியாயம் இவைகளைத்தவிர மற்றொரு விஷயத்திலும் தன் மனதைச் செலுத்தாதவனாக நியாயாதிபதி இருக்கவேண்டும். கை நீட்டிப் பணம் வாங்குங்குணம் நியாயத்திற்குக் கொடிய சத்துரு. அரசனுடைய கோபம் ஒருகால் நமக்கு சம்பவிக்குமோ என்ற பயம் நியாயாதிபதிக்குக் கொஞ்சமேனுமிருக்கக்கூடாது" என்றிவ்வாறு பலவிதமாய் நியாயாதிபதி யோசித்துக் கொண்டிருக்கையிலேயே சகாரன் தன் பிராதுடன் அவ்விடம் தோன்றினான்.

நியாயாதிபதி—நீர்தானா வாதி?

சகாரன்—ஆம் நான்தான் வாதி.

நியாயாதிபதி—உமது பிராதென்ன?

சகாரன்—"ஐயா, நான் பீப்பாயவ்வளவு உயர்ந்த குலத்திற் பிறந்தவன். அரசனுடைய மாமனார் என் தகப்பனார்: அரசனும் அவருடைய மாப்பிள்ளை: நான் அரசனுடைய மைத்துனன்: என் தமக்கை புருஷன் அரசன். இது என்னுடைய வம்சத்தின் வரலாறு" என்றான். இவன் சொன்ன இந்த நான்கு சம்பந்தமும் ஒருவித உறவைத்தான் காட்டுகிறதேயன்றி வேறல்ல. ஆனாலிந்த மூடாத்மா மனதில் நான்குவித உறவைக் காட்டுவதாக எண்ணம். இப்படி இவன் சொன்னதை நியாயாதிகாரி கேட்டு "வெகு சந்தோஷம். எனக்கு எல்லாந் தெரியும்; குலத்தைப்பற்றிச் சொல்லுவதில் என்ன பிரயோசனம். குணத்திற்கு நடத்தைதான் காரணம். நல்ல படுகையில் சந்தனமரமும் உண்டாகும்; அதைவிட வெகு செழிப்

பாய் வேலமரங்களும் முட்களுடன் உண்டாகின்றன. நல்லது உமது காரியத்தைச் சொல்லும் என்றான்.

சகாரன்—புஷ்பகாண்டகமென்ற ஒரு தோட்டம் மகாராஜாவால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் தினம் அங்குபோய்க் காலத்தைக் கழிப்பதுண்டு. அதே மாதிரி நான் இன்றைய தினம் அங்கு போயிருந்தேன். ஆச்சரியம் ஆச்சரியம். ஒரு பெண்ணின் பிணத்தை அங்கு இன்று பார்த்தேன்.

நியாயாதிபதி—இன்னாருடைய பிணமென்று நீர் அறிவீரா?

சகாரன்—நன்றாயறிவேன். யாரோ ஒரு போக்கிரி அவள் நகைக்காக ஆசைப்பட்டு அவளை என் தோட்டத்திற்குக் கொண்டு வந்து கொன்றாற்போல் காண்கிறது: நானல்ல.

இப்படி எங்கப்பா குதிருக்குள்ளில்லை என்பது போல "நானல்ல" என்று தனது மூடத்தனத்தால் நான் தான் அவளைக் கொன்றேன் என்பதுபோல சகாரன் பிராதைச் சொல்லி முடித்தான்.

இப்படி இவன் சொன்னவுடன் நியாயாதிபதி என்ன அநியாயம். நகர் சோதனைக்காரர்கள் எங்குபோனார்கள். ஓய் குமாஸ்தா "நானல்ல" என்பதை முதலில் எழுதிக் கொள்ளும் என்றார்.

குமாஸ்தாவும் உத்திரவுப்படியே எழுதியாயிற்று என்று தெரிவித்தான்.

இப்படி தான் "நானல்ல" என்று சொன்னதையும், அதைத்தானே முதலில் எழுதிக்கொள்ள நியாயாதிகாரி குமாஸ்தாவைக் கட்டளையிட்டதையும் பார்த்து

சகாரன் மனதிற்குள் நடுங்கி சரேலென்று அதிகாரியைப் பார்த்து ஸ்வாமி என்ன கோலாகலம் பண்ணுகிறீர்கள். "நானல்ல அதைப் பார்த்தவன்" என்று நான் சொல்லி முடிக்குமுன் "நான்லல" என்பதை எழுதச் சொல்லுகிறீர்கள் என "நியாயாதிபதி, அப்படியானல் நகைக்காக என்று பிராதில் சொன்னீரே. அப்படித்தான் என்பது உமக்கு எப்படித் தெரியும்," என்று விசாரிக்க அவளுடைய கை கால் கழுத்து முதலியவைகளெல்லாம் நகைகளில்லாமலிருந்தபடியால் நான் அப்படி அனுமானிக்கிறேன் என்றான். நியாயாதிபதி இருக்கக்கூடும் என்றார். சகாரனும் இந்தத்தடவை நாம் வாயாற் கெடாமற் பிழைத்தோம் என்று தேறுதலடைந்தான்.

பிறகு அதிகாரிகள் இப்பொழுது இந்தக் காரியத்தை நாம் ஒருசாட்சியை வைத்து விசாரிக்கவேண்டுமென்று யோசித்து வசந்தசேனை தாயாரை யழைத்துவர ஆளனுப்பினார்கள். அவள் திடீரென்று கச்சேரியிலிருந்து தன்னைச் சேவகனழைக்கக் கண்டு நடுநடுங்கி என்னமோ ஏதோ தனது நாயகனிடஞ்சென்று வசந்தசேனை இன்னும் வரக்காணேமே என்று விசாரிக்கப்பட்டவளாக அதிகாரிகள் உட்கார்ந்திருந்த மண்டபம் வந்து சேர்ந்தாள். அவ்விடம் வந்ததும் அதிகாரிகளை வணங்கி அவர்களால் கொடுக்கப்பட்ட ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

நியா—நீர்தான் வசந்தசேனையின் தாயார்?

தாய்—ஆம், நான்தான் அவள் தாயார்.

நியா—உம்முடைய பெண் எங்கே யிருக்கிறாள்?

தாய்—அவள் நாயகன் வீட்டில்.

நியா—அந்த நாயகன் யார்?

இப்படி நியாயாதிபதி கேட்க, பொது ஸ்தலத்தில் தன் பெண் சாருதத்தனிடம் இருப்பதாகச் சொல்லுவது அம்மகானுக்குக் குறைவு என்று எண்ணி தாய்க்கிழவி தலைகுனிந்தாள். அதைக்கண்டு நியாயாதிபதி "நாம் உம்மை நம்முன் வந்திருக்கிற பிராதின் நிமித்தம் கேட்கிறோம். வெட்கப்படாமல் சொல்லும்" எனவே, பிராதென்பதைக் கேட்டுத் தாய்க்கிழவி அங்கமெல்லாம் நடுங்கி "பிரபுக்களே, என் பெண் வினயத்தர் பேரனும், சகரதத்தர் குமாரனுமான, சாருதத்தரிடம் தன் காலத்தைக் கழிக்கிறாள்" என்றாள்.

இப்படி இவள் சொல்லி வாய் மூடுமுன் சகாரன் எழுந்திருந்து கேட்டீர்களா அதிகாரிகளே, என் பிராதுக்குப் பிரதிவாதி சாருதத்தன் என்றான்.

செட்டியானவர் சாருதத்தனுடன் வசந்தசேனை தன் காலத்தைக் கழிக்கிறாள் என்பதானது உம் பிராதிற்கு அவரைப் பிரதிவாதியாக்கமாட்டாது. கொஞ்சம் பொறுமென்றார்.

அதற்கு நியாயாதிபதி "எப்படியோ இந்த விஷயத்தை விசாரிக்க அவரும் வந்துதானாகவேண்டும். சீக்கிரம் அவரை வரவழைக்கவேண்டும்" என்று சொல்லி அப்பேர்ப்பட்ட மகாபுருஷனை கச்சேரிக்கு எப்படி வரவழைக்கிறது என்று மனதிற்குள் நடுங்கி, ஆனால் குற்றம் நம்முடையதல்ல, சட்டம் அப்படியிருக்கிறது என்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு ஒரு சேவகனைக் கூப்பிட்டு சாதாரண மனிதனை அழைப்பதுபோல் பதறாமல் வெகு மரியாதையுடன் சாருதத்தனை யழைத்து வரும்படி எச்சரித்து அனுப்பினார்.

இப்படி யனுப்பப்பட்ட சேவகனும் சாருதத்தர் வீட்டுவாசல் போய்ச்சேர்ந்தான். வாசலிற் சேவகனைக் கண்டதும் "குற்றமுள்ளவன் நெஞ்சு குறுகுறு என்கும்" என்ற பழமொழிப்படி அன்று காலமே தான் ஆரியகனை விலங்கு தறித்து விடுவித்தபடியால், அதை ஒருகாலரசன் அறிந்து தன்னைத் தண்டிக்க ஆளை யனுப்பினானோ என்று நடுங்கினார்.

இதற்குள் சேவகனும் வந்து அதிகாரிகள் நியாயஸ்தலத்திற்கு வரக் கேட்டுக்கொண்டதாகச் சொன்னான். அதைக்கேட்டு இனி யோசிப்பதில் பிரயோசனமில்லை. நியாயஸ்தலம் போனால் எல்லாந் தெரியுமென்று நினைத்துப் புறப்பட்டார். இப்படிப் புறப்படும்போதே சந்தேகித்துக்கொண்டு புறப்படும் இவருக்கு அன்றையதினமுண்டான அபசகுனங்களும் அனேகமாயிருந்தன. இவரது இடதுகண் துடித்தது. காக்கைகள் கத்தின. பறப்பாம்பு எதிர்ப்பட்டது. ஈரமில்லாத விடத்தில் வைக்கப்பட்ட கால் சறுக்கிற்று. இப்படியாயுண்டாகும் அபசகுனங்களைக் கண்டு நடுநடுங்கி இன்று நமது தலை தப்பப்போகிறதில்லை. வந்துவிட்டது நமது பிராணனுக்கு மோசம் என்று யோசித்துக்கொண்டு அதிகாரிகள் உட்கார்ந்திருந்த மண்டபம் வந்து சேர்ந்தார். மண்டபத்தைப் பார்த்தது அது சாருதத்தர் கண்ணுக்கு ஒரு சமுத்திரம்போல் தோன்றிற்று. முற்றிலும் அதைச் சமுத்திரமாகச் சொல்லவேண்டுமே அது எப்படி என்றால் சிந்தை என்ற விசாரத்தில் மூழ்கியிருக்கும் மந்திரிகளையே அந்த நியாயாதிகாரம் என்ற சமுத்திரத்தில் ஜலமாகச் சொல்லலாம். அங்குமிங்கும் அல்லாடி கோட்

சொல்லும் தூதர்களையே அச்சமுத்திரத்தின் அலைகளாக வும், தெரியாத விடங்களிற் பதுங்கி நின்று ஒட்டுக் கேட்டு ஆட்களை வளைக்குஞ் சேவகர்களையே முதலை களாகவுஞ் சொல்லலாம். நியாயத்திற்கு வந்தவர்களை வதைத்துப் பணம் பிடுங்கித்தின்கிற குமாஸ்தாக்களை ஆளைக்கொத்தித் தின்னும் வாள் என்கலாம். அச்சமுத் திரம் அலைமோதும் கரையையே நியாயத்தின் கரை என் கலாம். நியாயமென்ற கரை கடைசியாய்ச் சுகமாயிருந்த போதிலும் சமுத்திரம் என்பது பார்க்கப்பட்டவர்களுக் குப் பயமல்லவா? அப்படிப்பட்ட சமுத்திரத்திற்கு ஒப்பான நியாய மண்டபத்தைப் பார்த்து, சாருதத்த ரென்ற மகாபுருஷரும் நடுநடுங்கினார். அதனுட் புகும் பொழுதே அதன் நிலை தன் தலைமேல் மோத பயமுற்று "ஐயோ இன்று நேரிட்ட அபசகுனம் போதாதா? இது வும் வேண்டுமா?" என்று மனம் பதைத்து உட்சென்றார்.

இப்படி வரும் சாருதத்தரை அதிகாரி தூர இருந்தே பார்த்து "ஆகா சாருதத்தன் வடிவம் எவ் வளவு அழகாயிருக்கிறது. எவ்வளவு எடுப்பான மூக்கு; எவ்வளவு விசாலமான கண்கள்; இப்படிப்பட்ட உரு வம் பாபமும் செய்யுமா? மனிதனிடத்திலும் பசு, குதிரை முதலிய மிருகங்களிடத்திலும், நல்ல உருவம் ஒருநாளும் தீமை செய்கிறதில்லை என்பது சாஸ்திர மாயிற்றே" என்று யோசிக்கையிலேயே சாருதத்த ரங்கு வந்து சேர்ந்து எல்லாருக்குந் தலைவணங்கி நின் றார். அதிகாரியும் பரபரப்பாய் எழுந்திருந்து அவருக்கு மரியாதைபண்ணி ஆசனத்திலிருத்தினார். இப்படிச் செய்யப்பட்ட மரியாதை சகாரன் கண்ணில் துரும்புபோ

னுறுத்தியது. வசந்தசேனையின் தாயார் அதுவரையில் சாருதத்தனைப் பார்த்திராதவளாகையால் அவனைக்கண்டதும், இம்மகா சிறப்புள்ள புருஷனிடமா நமது பெண் காலத்தைக் கழிக்கிறாள். அவள் பாக்கியமே பாக்கியம் என்று மனதிற்குள் மெச்சினாள். சகாரன் தனது இருப்பிடத்தைவிட்டு எழுந்திருந்து, "நல்லது அதிகாரிகளே! வெகு நன்றாய் நியாயம் செலுத்துகிறீர்கள். பெண்ணைக் கொன்ற பாதகனுக்கும் ஆசனம் கொடுத்தது மரியாதையா?" என்றான். இவன் சொன்னதை ஒருவராவது கவனிக்கவில்லை.

நியாயாதிபதி உடனே சாருதத்தரைப் பின்வருமாறு விசாரணை செய்யலானார் :—

நியாயாதிபதி—ஐயா சாருதத்தரே! இந்த மனுஷியினுடைய பெண்ணுடன் உமக்குப் பிரீதியாவது பிரியமாவதுண்டா?

சாருதத்தன்—எந்த மனுஷியுடைய.

நியா—இந்த மனுஷியுடைய என்று வசந்தசேனை தாயைக் காட்டினார்.

சாருதத்தரும் அவளை இதுவரையில் கண்டிராதவராகையால் எழுந்திருந்து அவளுக்கு மரியாதை பண்ணி பின்பு "உண்டு" என்று சபையில் சொல்ல வெட்கி முகத்தைத் தொங்கவிட்டார். அதற்கு அதிகாரிகளும், செட்டி முதலான உத்தியோகஸ்தர்களும் "வியவகாரம் வந்திருக்கும்பொழுது வெட்கப்படக் கூடாது. உண்மையை உள்ளபடி மறையாமற் சொல்லும்" எனவே, வியவகாரம் வந்திருக்கும் என்று கேட்டவுடன் சாருதத்தர் நடுநடுங்கி யாருடன் கூட எனக்கு வியவகாரம் என்று

அதிகாரிகளைக் கேட்டார். உடனே என்னை நானே விட்டுக் கொண்டேனென்று சொல்வதுபோல், சகாரன் எழுந் திருந்து, "என்னுடன் கூட உன் வியவகாரமடா" என் ருன். அதைக்கேட்டுச் சாருதத்தன் "உனக்கும் நமக்கும் ஒருநாளும் வியவகாரம் உண்டாகமாட்டாதே" என்ருன்.

உடனே நியாயாதிபதி விசாரணையை ஆரம்பித்தார்.

நியா—இவனுடன் நீர் பேசுவானேன். வசந்தசேனை உமக்கு வேண்டியவள் தானு?

சாரு—ஆம்.

நியா—அவள் எங்கே?

சாரு—அவள் வீடு சென்ருள்.

செட்டி, குமாஸ்தா—எப்படிச் சென்ருள்? எப்பொழுது சென்ருள்? யார் அவளுடன் கூடச் சென்ருர்கள்?

சாரு—வீடு சென்ருள். இன்னமாகச் சென்ருளென்று நான் எப்படிச் சொல்லக்கூடும். வீடு சென்ருள்.

சாருதத்தனுக்கு இந்த விஷயத்தில் இவ்வளவு தான் தெரியும். இன்ன மாதிரி போனுளென்றும் யார் கூடப்போனுர்கள் என்றும் சொல்லக்கூடாமையா யிருந் தது. அவன் பார்த்தவனல்ல. இப்படி இவன் தயங் கியது இவன்மேல் அதிகாரிகள் சந்தேகிக்க இடமாயிருந் தது. அதுதான் சமயமென்று சகாரன் எழுந்திருந்து "அடே என் புஷ்பகரண்டகமென்ற தோட்டத்தில் கொண்டு வந்து அவளைக் கொன்றுவிட்டு இப்பொழுது வீடுபோனுள் என்கிருயோ?" என்ருன்.

இதை அதிகாரி கேட்டு தனக்குள்ளேயே ஆகா! சாருதத்தனை இப்படித் தூஷிப்பது மலையைத் திராசில் வைத்து நிறுப்பதுபோலும், சமுத்திரத்தைக் கையால்

கடப்பது போலும், காற்றைப் பையிலடைப்பதுபோலு மாகாத காரியமல்லவா என்று யோசித்துக்கொண்டார். இப்படி அதிகாரி யோசிக்க "என்ன பக்ஷபாதமாக நியாயம் செலுத்தப்படுகிறது" என்று சகாரன் சொன்னான். உடனே அதிகாரி அவனைப் பார்த்து "அடே மானிடப்பதரே, நீ வேதங்களை நிந்திக்கிறாய். ஆனால் உன் நாக்குமட்டும் அழுகி விழாமலிருக்கிறது. நடுமத்தியானத்தில் சூரியனைப் பார்க்கிறாய். உன் விழி தெரித்து விழக்காணோம்; கொழுந்து விட்டெரியும் தீயில் கையை நுழைக்கிறாய் உன் கை எரியவில்லை. ஆரிய சாருதத்தனை அவனுடைய நற்குணங்களை மறந்து நிந்திக்கிறாய்; உன் தேகத்தை இந்தப் பூமாதேவி கொண்டுபோகவில்லை. ஆரிய சாருதத்தன் எப்படிக் கெட்ட காரியம் செய்வான்! இந்த ஊரை மாடமாளிகை கூடகோபுரங்களாலலங்கரித்து இரப்பவர்களுக்குத் தனது பொருளை எல்லாம் கொடுத்த மகான் எப்படிப் பாவம் செய்வான்!" என்று சகாரனை நிந்தித்தான். இப்படி நியாயாதிபதி சொன்னதற்கு சகாரன் "நல்லது பக்ஷபாதமாகவா நியாயம் செலுத்துகிறீர்கள்" என்றான். இதைக் கேட்டதும் வசந்தசேனையின் தாயார் "அடா படுபாவி, தன் வீட்டில் திருடன் கொள்ளையடித்து ஆபரணங்களை எல்லாங் கொண்டுபோயிருக்க, அவைகளைத்தான் சூதில் தோற்றுவிட்டதாகச்சொல்லி, நான்கு சமுத்திரங்களிலிருக்கும் பொருள்களையும் விலைக்கு வாங்கக்கூடிய மதிப்புள்ள ஒரு இரத்தினமாலையை சாருதத்தனனுப்பி யிருக்கிறானே. அவனா இப்படிப்பட்ட பாவம் செய்வான். ஐயோ எங்கடி போய்விட்டாய்" என்று தன் பெண்ணின் ஞாபகம்

வந்துவிடவே அழத் தலைப்பட்டாள். உடனே, நியாயாதி பதியும் மறுபடி விசாரிக்க ஆரம்பித்தார்.

நியா—ஆரிய சாருதத்தரே, அவள் வீட்டிற்கு எப்படிப் போனாள்? காலால் நடந்து போனாளா? வண்டியேறிக்கொண்டு போனாளா?

சாரு—நான் நேராகப் பார்க்க அவள் போகவில்லை. எனக்குத் தெரியாது. காலால் போனாளோ அல்லது வண்டி ஏறிப்போனாளோ, என்றான்.

இப்படி இவன் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே அங்கு சந்தனகன்மேல் கோபித்துக்கொண்டு அவனிடம் சண்டையிட்டுக்கொண்ட வீரகன் வந்து தோன்றினான். இவன் சாருதத்தன் வண்டியில் ஆரியகன் ஏறிப்போகும்பொழுது வண்டியைப் பரிசோதிக்க மறித்தவன் என்று முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா. அவன் அங்கு வந்து அதிகார சபையைப் பார்த்து "தர்மப்பிரபுக்களே! நானும் சந்தனகனும், நகரத்தைக் கோலிப்பார்க்கும்பொழுது ஒரு வண்டி நான்கு பக்கங்களிலும் மூடப்பட்டு வந்தது. அது சாருதத்தன் வண்டி என்று வண்டிக்காரன் சொன்னான். அதில் சந்தனகன் ஏறிப்பார்த்து வசந்தசேனை போவதாகச் சொன்னான். நானதைப் பார்க்க வேண்டுமென்றவுடன் என்னை அவன் அடித்து அவமதித்தான்" என்றான்.

இவன் இப்படிச் சொல்லி முடித்தவுடன் சகாரன் எழுந்திருந்து "கேட்டீர்களா அதிகாரிகளே" என்றான். சாருதத்தன் தயங்குவதும், வீரகன் வந்து சொன்னதும் நான் சொல்லுவதை உறுதிப்படுத்துகிறதே என்று சகாரன் சொன்னான். அதிகாரியானவர், "ஆகா நிர்மலமான

பிரகாசமுள்ள சந்திரனை ராகு பிடித்துவிட்டதே, தெளிந் தோடும் நதியில் கரையிடிந்து விழுந்து கலக்கிற்றே" என்று தயங்கி வீரகனைப் பார்த்து, "அடே உன் சங் கதியைப் பின்பு விசாரிப்போம். நீ சீக்கிரம் ஓடிப் போய் புஷ்பகரண்டகமென்னும் தோட்டத்தில் பெண்பிணம் ஏதாவது இருக்கிறதா பார்த்துவா" என்றார். அவன் உடனே ஓடுவதாகக் காட்டி சகாரனிடம் பணம் பிடுங் கித் தின்கிறவனுகையால் சற்று நேரத்திற்குள் திரும்பி வந்து தான் அந்தத் தோட்டத்தைப் போய்ப் பார்த்த தாகவும் அங்கு ஒரு பெண் பிணத்தை நாய்களும் நரி களும் கடித்துத் தின்றுகொண்டிருப்பதாகவும் வந்து பொய் சொன்னுன்.

இதைக்கேட்டதும் அதிகாரிக்கு மனம் வெறுத் துப்போயிற்று. ஆச்சரியம்! எவ்வளவுக் கெவ்வளவு நாம் தீர விசாரிக்க யோசிக்கிறேமோ அவ்வளவுக்கவ் வளவு சங்கடமாயல்லவோ முடிகிறது என்று தயங் கிஞர். சாருதத்தனும் தான் ஒரு பாபமுமறியாம லிருக்க சாட்சிகளெல்லாம் தனக்கு விரோதமாயிருப்ப தைக்கண்டு, கஷ்டங்கள் ஒரு மனிதனுக்குச் சேர்ந்து வருவதை யோசித்து விசனப்பட்டான். உடனே அதி காரியானவர் சாருதத்தனைப் பார்த்து "ஐயா சாரு தத்தரே! உண்மையைச் சொல்லும்" என்றார். அதற்கு சாருதத்தன், "துஷ்டகுணமும், பிறர் நற்குணத்தைக் கண்டு பொறுமையுள்ள மோகத்தால் கண் மூடப் பட்டு, எப்பொழுது பிறரைக் கொல்லுவோமா என்று நினைத்திருக்கிற ஒருவன், இன்னொருவன்பேரில் பகை யால் ஏதாவது ஒன்று சொன்னுல் அது உங்களுக்கு

உண்மையாய்விடுகிறதே. நான் என்ன சொல்லப்போகி றேன். நானோ என் வீட்டுத் தோட்டத்தில் படர்ந்திருக் கும் ஒரு கொடியை புஷ்பத்தின் பொருட்டு இழுக்கிறது கூட இல்லை. எங்கு இலை முறிந்துபோமோ என்று நடுங்கு வேனே. அப்பேர்ப்பட்ட நான் ஒரு பெண்ணின், அதிக மாகச்சொல்ல, நானே அனுபவித்துவரும் ஒரு பெண்மணி யின் வண்டுபோல் கறுத்த கொண்டையில் கைபோட்டு எப்படிக் கொலைசெய்வேன்" என்றான்.

உடனே சகாரன் எழுந்திருந்து "நியாயாதிபதி களே! வெகு அழகாயிருக்கிறது. பக்ஷபாதமாகவே நியாயஞ் செலுத்துகிறீர்கள். பெண்ணைக் கொன்ற சாரு தத்தனுக்கு இன்னுமாசனமா" என்றான். இப்படி இவன் சொல்லவே நடுங்கி சாருதத்தனும் தனது ஆசனத்தை விட்டெழுந்து கீழே உட்கார்ந்தான். உடனே அவன் உட்கார்ந்த ஆசனத்தில் தானுட்கார வேணுமென்று சகா ரன் அதன்மேலுட்கார்ந்தான்.

இதற்கு முதல் நாள் ரோஹசேனன் என்ற குழந்தை தனக்கு மண்வண்டியா என்று அழுகையில் வசந்தசேனை தன் நகைகளைக் கழற்றி அந்த வண்டியில் மாட்டினதாகச் சொல்லியிருக்கிறோம்; அன்றியும், அந்த நகைகளை வசந்த சேனையிடம் சேர்ப்பிக்க சாருதத்தன் தன் ஒரே நேசனான மைத்திரேயனிடம் ஒப்பிவைத்ததாகச் சொல்லியிருக் கிறோமே. அவன் அந்த நகைகளை அவள் வீட்டிற்கு எடுத் துப் போய்க்கொண்டிருந்தான். வழியில் ஏதோ காரணத் தால் தன் யஜமானனை அதிகாரிகள் விசாரிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு முதலில் அதிகாரமண்டபம் போய் நமது யஜமானனைப் பார்ப்போமென்று நகை முடிப்பைக்

கக்கத்திலிடுக்கிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். அங்கு சாருதத்தனைக் கண்டு க்ஷேமமா என்று கேட்க, சரீரமாத்திரத்தில் க்ஷேமம் என்று அவன் சொல்லவே என்ன சங்கதி என்று அவனை முற்றிலும் விசாரித்தான். அவனும் நடந்ததை எல்லாஞ் சொன்னான். இதைக் கேட்டதும் மைத்திரேயனுக்குப் பொறுக்கக்கூடாத துக்கம் வந்து விடவே "ஆகா அப்படியா இந்த ஊர் முடிய மாட மாளிகைகளாலும் கூடகோபுரங்களாலும் அலங்கரித்து இரப்பவர்களுக்கெல்லாந் தன் பணத்தைக் கொடுத்து ஏழையாய்ப்போன என்யஜமானனை யார் இப்படித் தூஷிக்கிறது. அடே சமஸ்தானகா! சகாரா! நெறி கெட்டவனே! அநேக குற்றங்களுக்கு முட்டு முடிசுப்பானையே! தங்க நகைகளணிந்த குரங்கே! பதரே! சொல்லடா என்முன் மறுபடி சாருதத்தன் செய்த சங்கதியை. என் பாக்கியம்போல் கோணியிருக்குமிந்தத் தடியைக்கொண்டு உன் மண்டையைப் பிளக்கிறேன்" என்று தடியை இரு கரங்களாலும் ஓங்கினான். அப்படி ஓங்குகையிலேயே இவன் கக்கத்தி லிடுக்கியிருந்த நகை முடிப்பு நழுவிக் கீழே சிதறுண்டு விழுந்தது.

உடனே விழுந்த நகைகளை சகாரன் எடுத்துக் கொண்டு, "பார்த்தீர்களா அதிகாரிகளே! நகையைத் திருடிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு குற்றமற்ற என்னை மண்டையைப் பிளக்கிறேன் என்கிறான்" என்றான். அதற்கு விதூஷகன் "உண்மையை உள்ளபடி சொல்லுகிறதுதானே" என்று சாருதத்தனைப் பார்த்துச் சொல்ல, அதற்கு அவன் "நேசா! சொல்லி என்ன பிரயோசனம். அங்காரகனும் நமக்குப் போதாமல், பிர

கஸ்பதியாகிய குருவுங் கழியும்போது தூமகேதுபோல் மற்றொரு கிரகமும் தோன்றியிருக்கிறது" என்றான். உடனே செட்டி குமாஸ்தா முதலான அதிகாரிகள் கீழே விழுந்த நகைகளை எடுத்துத் தாய்க்கிழவியினிடங்காட்டி இது யார் ஆபரணங்கள்? உம்முடைய பெண்ணுடையது தானா என்றார்கள். அதற்கு அவள் அவளுடையது போல இருக்கிறது, அவளுடையது தானோ அல்லது அவைகளுக்கொப்பான வேறு நகைகளோ நான் எப்படி நிச்சயத்தை சொல்லுவேன். தட்டான் ஒரு நகையைப் போல எவ்வளவோ நகைகள் பண்ணக்கூடுமென்றாள்.

நியா—நல்லது சாருதத்தரே! இவைகள் உம்முடைய நகைகளா?

சாரு—இல்லை இல்லை.

நியா—இல்லாவிட்டால் யாருடையது?

சாரு—இந்தக் கிழவியின் பெண்ணினுடைய நகைகளே.

இப்படிச் சாருதத்தன் சொல்லவே நியாயாதிபதி மிக வருத்தமுற்று "ஓய் சாருதத்தரே! உண்மையைச் சொல்லும்" என்று அடிக்கடி கேட்க அதற்குச் சாருதத்தனும் இனி வசந்தசேனை போனபிறகு நாம் பிழைத்திருப்பதில் என்னவென்று நினைத்து "அதிகாரிகளே நானோ பாபமற்ற குலத்திற் பிறந்தவன். ஒரு பாபமும் அறியேன். பாபம் என்னிடத்தில் இருக்கிறது என்று நீங்கள் நினைத்துவிடும் பக்ஷத்தில் நான் பிழைத்திருப்பதில்தான் எனக்கென்ன பயன். கொலைக்கஞ்சாத என்னால், பரலோகமொன்று உண்டென்பதை மறந்து ஒரு ஸ்திரீயானவள் விசேஷமாக ரதி என்றே சொல்லலாம்

என்னால் . பாக்கி சொல்லவேண்டியதை இந்தத் தர்ம பிரபு சகாரர் சொல்லி முடிப்பார்'' என்றார்.

உடனே சகாரன் எழுந்திருந்து "என்னாற் கொல்லப்பட்டாள் என்று ஒப்புக்கொள். ஏன் விழிக்கிறாய்'' என்றான். அதற்கு சாருதத்தன் "நீதான் சொல்லி விட்டாயே நான் என்னத்திற்கு அதை மறுபடியுஞ் சொல்லுகிறது,'' என, இதையே சாருதத்தன் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதாக எண்ணும்படியாய் விட்டது. அதிகாரியானவர், நாம் என்ன செய்கிறது. சாக்ஷிதான் நமக்குப் பிரமாணம். ஒவ்வொருவித சாக்ஷியும் உமக்கு விரோதமாயிருக்கிறது; நீர் வசந்தசேனையைக் கொன்றதாக ருசுவாய்விட்டது. உமது குற்றத்தைச்சொல்லி, ஆயினும் பிராமணனுகையால், கொல்லக் கூடாது. ஊரை விட்டு ஓட்டிவிட வேண்டுமென்று மனு என்பவர் சொல்லியிருப்பதாக நியாயத்தையு மெடுத்துக் காட்டி அரசனுக்கு எழுதுவோம். அவர் என்ன சொல்லுகிறாரோ அந்தப்படி நடப்போம் என்று பாலகனுக்கு அதிகாரிகள் அறிவிக்கவே, அவர் பெண்ணைக் கொன்ற பாவியை அரைநாழிகைகூட வைத்திருக்கக்கூடாது. எந்த நகைகளின் நிமித்தம் கொன்றானே அந்த நகைகளை அவன் சுழுத்தில் போட்டு நான்கு சந்துகளிலும் அவன் செய்த குற்றத்தைப் பறைபடித்து எல்லாருமறியச் செய்து இம்மாதிரி குற்றம் யாராவது செய்வார்களேயானால் அவர்களுக்கும் இதுதான் தண்டனை என்று சொல்லிச் சாருதத்தனைக் கழுவிலேற்றிவிட பாலகனும் கட்டளை இட்டுவிட்டான்.

இப்படி வந்த உத்திரவைக் கேட்டு, சாருதத்தன்

நடுங்கி, ஆகா! என்ன ராச்சியம்! என்ன நீதி! நானின் றையதினம் எப்படி ஒரு பாபமுஞ் செய்யாமல் கழுவில் ஏற்றப்படப்போகிறேனோ அப்படியே இதுவரையில் எத்தனை பெயர்கள் மாண்டார்களோ தெரியவில்லையே, அப்பா மைத்திரேயா! நீ வீடு சென்று ரோஹசேனனையும், தூதிகையையும், இரக்ஷித்துக்கொண்டிரு. நான் என்ன பாவம் பண்ணினேனோ, இன்று இப்படியானேன் என்று கண்ணீர் வடித்தான். அதைக்கண்டு மைத்திரேயனும் துக்கித்து "தங்களுக்குப் பிற்காலமும் நானிருக்க உத்தேசித்திருப்பதாக நினைத்து விட்டீர்களோ" என்று சொல்லி உயிருடனிருக்கையிலேயே ரோஹசேனனை தன் யஜமானனுக்குக் காட்ட வீட்டை நோக்கி ஓடினன். அதிகாரிகள் சாருதத்தனைக் கழுவிலேற்ற இரண்டு பறையர்கள் வசம் ஒப்பிவித்துவிட்டு தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

சாருதத்தருக்கு சாக்கோலத்திற்குரிய அலங்காரங்கள் செய்து மேலெல்லாம் ரத்தசந்தனம் பூசி கழுத்தில் மாலை போட்டு தோளில் அவர் ஏறவேண்டிய கழுவையும் வைத்துப் பறையர்கள் அவரைத் தெருத்தெருவாய் அழைத்துப்போனார்கள். ஐயோ பாவம்! நல்லவர்கள் அநியாயமாய் நாசமடைவதையும், நட்சத்திரங்கள் உதிர்வதையும், மாடு கன்று போடுவதையும் பார்ப்பது மகா பாபமென்று சொல்லியிருக்கிறதே அதுபோல அவ்வூரிலிருந்து நல்ல ஜனங்கள் சாருதத்தனைப் பார்க்கக்கூட மனம் எழாமல் முகத்தில் துணியைப் போட்டுக்கொண்டு ஓடிவிட்டார்கள். மாடியில் ஏறி ஜன்னல்கள் வழியாய் சாருதத்தனைப் பார்த்த பெண்கள்

சாருதத்த மகாபுருஷா! உமக்கு மிப்படிப் வந்ததா என்று அலறினர்கள். உடனே முதல் சந்தில் சண்டாளர்கள் அரசனுடைய உத்திரவின் படி பின்வருமாறு பறைசாற்றினர்கள்:—

“வியாபாரி வினயதத்தரின் பேரன், சகரதத்தரின் புத்திரன், ஆரிய சாருதத்தனென்ற பெயருள்ளவன், பணப்போாசை கொண்டு வசந்தசேனை என்ற மாதைக் கொன்றபடியால் இன்று கழுவேற்றப்படுகிறான். ஜாக்கிரதை. இனி யாராவது இப்பேர்ப்பட்ட கெட்ட காரியஞ் செய்தால் அவர்கள் கதியுமிப்படித்தான் முடியும்,” என்றிவ்வாறு சாற்றப்பட்ட பறையைக்கேட்டு சாருதத்தன் “ஐயோ! நமது பெயர் இந்தப் பாபத்தையா பண்ணிற்று. எல்லாரும் யக்ஞம் பண்ணும்பொழுதும் தேவ பாகங்களைக் கொடுக்கும்பொழுதும் இம்மாதிரி எனது பிரவரம் சொல்லவேண்டியதாக விருக்க இன்றைய தினம் நான் செய்த போனஜன்மாந்தர பாபத்தால் தெருத் தெருவாய் சண்டாளர்கள் சொல்லலாயிற்று ஈசுவரா! அதுதான் போகட்டுமென்றால் வசந்தசேனையிடம் நாம் நன்றாய் யௌவன சுகத்தை அனுபவித்து அவளைக் கொன்றோம் என்ற அபவாதத்தையுங் காதால் கேட்க வேண்டுமா!” என்று மனம் பதைத்தான்.

இப்படியிருக்கையில் ரோஹசேனனை அழைத்து வரப்போன மைத்திரேயனும், குழந்தையுடன் அங்கு வந்து சேர்ந்தான். குழந்தை தகப்பனைக் கண்டதும் “அப்பா” என்று அலறிக்கொண்டு அவனிடம் ஓடிற்று. சாருதத்தனும் பறையர்களைக் கேட்டு கொஞ்சகாலம் விடைபெற்றுக்கொண்டு தனது குழந்தையைக் கட்டி

உச்சி முகர்ந்து "அப்பா குழந்தாய் உனது
வெகு சிறியதாக இருக்கிறதே; இதால் கொ
எள்ளுஞ் ஜலமும் எனக்கு பரலோகத்தில் எப்ப
தாகத்தை யடக்கும், நீ பெரியவனாய் நிரம்ப ஜலம்
கொடுக்கிறவரையில் நான் எப்படிக் காத்திருப்பேன்"
என்று துக்கப்பட்டார். பிறகு குழந்தைக்கு என்ன
கொடுக்கிறதென்று தேடிப்பார்த்துத் தன்னிடம் ஒன்று
மில்லாமலிருக்கத் தனது பூணூலைக் கழற்றி அப்பா
குழந்தாய் முத்தாலுந் தங்கத்தாலுஞ் செய்யப்படாமல்
பருத்தி நூலால் பின்னப்பட்டிருந்தபோதிலும் பிராம
ணர்களுடைய பெரும் நகையா யிருந்துகொண்டு தேவ
தைகளையும், பிதிர்க்களையும் திர்ப்தி பண்ணிவைக்கிற
இந்தத் திரவியத்தைக் கைப்பற்று என்று சொல்லித்
தனது பூணூலைக் கழற்றி குழந்தை கையில் கொடுத்தான்.
குழந்தை தனது தகப்பனைக் கொலை செய்யக் கொண்டுபோ
குஞ் சண்டாளர்களைப் பார்த்து சண்டாளர்களே என் தகப்
பனை விட்டு என்னைக் கொன்றுவிடுங்கள் என்றது.
அவர் அதைக்கேட்டு வியப்புற்று, இப்படிச் சொன்ன
போதிலும் நீ வெகு காலம் வாழ்ந்திரு. நாங்கள் சண்
டாள ஜாதியில் பிறந்து சண்டாளர்களானோம், காரியத்தி
னால் சண்டாளர்களல்ல. இப்பேர்ப்பட்ட நல்லவராகிய
உன் தகப்பனைக் கொல்லச் செய்கிறானே பாலகன்
அவன் சண்டாளன் என்றார்கள். இப்படிப் பேசிக்
கொண்டே போகையில் இரண்டாவது சந்து வந்துவிட்
டது. அதிலும் முன் பறை சாற்றினதுபோலப் பறை
சாற்றினார்கள்.

இந்தத் தெருவில் தான் சகாரன் வீடு. இந்தப் பாவி

...யைக் கொல்லும்பொழுது சேடனொருவ ...பார்த்திருந்ததாகவும், அந்தச் சேடனைச் சகா ரன் தனது மாடியில் சங்கிலிகள் போட்டுக் கட்டி வைத்த தாகவுஞ் சொன்னோமே. இப்படிச் சாற்றப்பட்ட பறையானது அவன் காதில் விழ அவன் "ஐயோ! ஐயோ! என்ன அநியாயம். நமது யஜமானனை சகா ரன் இந்தக் காரியத்தைச் செய்திருக்க சாருதத்தன் இதற் காகச் சாகவாவது; நமது பிராணன் போனாலுஞ்சரி; சாருதத்தன் பிழைக்கவேண்டும்" என்று எண்ணி மாடியி லிருந்தபடி தான் கட்டப்பட்டிருந்த கம்பத்தைப் பேர்த் துக்கொண்டு குதித்தான். குதித்த வேகத்தால் சங் கிலிகள் தெறித்துப்போய்விட்டன. ஓடோடியும் வந்து சாருதத்தன் காலில் விழுந்து சண்டாளர்களைப் பார்த்து, "ஐயோ! சாருதத்தன் ஒரு பாபத்தையுமறியானே! ஏன் வீணாக அவனைக் கொல்லக் கொண்டு போகிறீர்கள். இது செய்ததெல்லாஞ் சகாரன்" என்று சொன்னான். இதைக்கேட்டதுஞ் சாருதத்தன் பெருமூச்சுவிட்டு "யார ப்பா நீ நான்கு பக்கங்களிலுந் தீப்பட்டு எரிந்த பயிர்க ளெல்லாம் நாசமாய்ப்போகிறபொழுது துரோண மேகம் வந்து அவைகளைப் பிழைப்பித்தாற்போல் வந்தாய்; கேட் டீர்களா ஜனங்களே! எனக்குச் சாகப்போகிறோமே என்ற பயங் கொஞ்சங்கூடக் கிடையாது. என் பேர் கெட்டதே என்ற துக்கம் உதைத்துக்கொண்டு வந்தது. இனி நான் கொல்லவில்லை என்ற சங்கதி உங்களுக்குத் தெரிந்து விட்டபடியால் எனக்குச் சாவு ஒருவனுக்குப் புத்திரன் பிறந்தால் எவ்வளவு சந்தோஷமோ அவ்வளவு சந்தோ ஷத்தைத் தரும்" என்றான்.

சகாரனும் நாம் செய்த காரியத்தை
தன் தலையில் வைத்து, அவனைக் கழுவுக்க
டோமென்ற ஆனந்தத்துடன் வீடுவந்து, நன்றாய் வயிறு
வெடிக்கத் தின்று, நமது வீதிவழியாய்ச் சாருதத்தன்
போவான், மாடியிலேறிக்கொண்டு பார்ப்போம் என்று
மாடி ஏறினான். இவன் மாடியிற் சென்றதும், இவன்
தெருக்கோடியில் பறைநின்று ஜனங்கள் ஏகமாய் சாரு
தத்தனைச் சுற்றி நிற்கக்கண்டான். ஏது தப்புபறை நிற்
கிறது, என்று திரும்பிப்பார்க்கையில் தான் கட்டி
வைத்திருந்த சேடனைக் காணேம். ஏது சேடன் எங்கே
போனான், என்று யோசிக்கையிலேயே, சாருதத்த
னுடன் சேடன் பேசுவதையும், ஜனங்கள் நான்கு பக்க
முஞ் சுற்றிக் கேட்பதையுங்கண்டு திகைத்து நாம் செய்த
காரியங்களுக்கெல்லாஞ் சேடனல் இடையூறு வந்ததென்
றெண்ணி, வேகமாயோடி, சண்டாளர்களுக்குத் தனது
கைத்தங்கக்காப்பைக் கழற்றிக்கொடுத்து, "சேடன்
என் வீட்டில் நேற்றுத் திருடினன். அவனை உதைத்
துக் கட்டிவைத்திருந்தேன். அவன் அதன் பேரில்
என்னைப்பற்றி என்னென்னமோ உளறுகிறன். நீங்
கள் நம்பவேண்டாம்" என்று சொல்லிச் சந்தடியை
அடங்கச்செய்து சேடனை இழுத்துக்கொண்டு போய்
இன்னும் நன்றாக இடுப்புமுறிய அடித்து வீட்டிற்
கொண்டுபோய் அடைத்தான். ஏழை சொல் அம்பல
மேறுமா? சேடன் என்னதான் முயன்றும் பயன்பட
வில்லை. இப்படியாய் சேடன் வந்துகூட தனக்குக் கதி
பிறக்காமல் தெய்வம் நம்மிடம் கோபித்துக்கொண்டிருக்க
நாம் என்ன செய்கிறதென்று, தன்னை நொந்து சாருதத்

கழுவேறவேண்டிய சுடுகாட்டைப் பார்க்க ...துகொண்டிருந்தான்.

சாருதத்தனுக்கு வந்த இவ்வளவு கஷ்டங்களுக்கும் ஒரு விதத்தில் காரணமாக விருந்த வசந்தசேனை தான் இறந்துபோன தோட்டத்திற்குச் சமீபத்தில் ஒரு தாபசி யின் மடத்திற் களைப்பாறிக்கொண்டிருந்ததாகச் சொல்லி இருக்கிறோமே. அவள் தனது களை தீர்ந்து வீட்டுக்குப் போகப் புறப்பட்டாள். தனியாய்ப் போகப் பயந்து ஸம் வாககன் என்ற சன்னியாசியையும் கூட வரும்படி கேட் டுக்கொள்ள அவனுமப்படியே முன் சென்றான். அவன் பின் வசந்தசேனை போய்க்கொண்டிருந்தாள். பட்டணத் திற் புகுந்ததும் பறைசாற்றின சப்தம் ஒன்று இவர்கள் காதில் விழுந்தது. கொஞ்சம் நின்று என்னவென்று நிதானித்துக்கேட்கையில் வசந்தசேனையைக் கொன்ற தற்காகச் சாருதத்தன் கழுவிலேறப்போகிறான் என்பது தெரியவந்தது. வந்தது மோசம் என்று சாருதத்தன் நின்ற இடத்தை நோக்கி வசந்தசேனையும் அவளுடன் வந்த சன்னியாசியும் ஓடினார்கள். அப்பொழுதுதான் கழுவிலேற்ற சண்டாளர்கள் சாருதத்தனை இழுக்கிற காலம். அந்த மகா புருஷன் மாத்திரம் தர்மம் என்பது ஒன்று இருக்கும் பக்ஷத்தில் அது என்னை இப்பொழு தும் காக்கும் என்று சொல்லிக்கொண்டு எப்பொழுதும் தர்மத்தையே கைப்பற்றினவனாகவே இருந்தான். கொலை யாளிகள் தன்னைக் கழுவிலேற்ற ஆரம்பிக்கும்பொழுது “அடே கொலையாளிகளே பொறுங்கள் பொறுங்கள். யாரைக்கொன்றான் என்று சாருதத்தனை கழுவிலேற்றப் போகிறீர்களோ அந்த வசந்தசேனை இதோ வந்தேன்”

என்று சொல்லிக்கொண்டு சாருதத்தனு

ருளில் அவள் வந்து விழுந்தாள். அந்த சன்னியா

வந்து விழுந்தான். உடனே இருவர்களும் எழுந்திருந்து இன்னும் சந்தேகமாகையால் எங்கள் சாருதத்தர் பிழைத் திருக்கிறாரா என்று சண்டாளர்களைக் கேட்டார்கள். அவர் களுக்கு க்ஷணத்திற்குள் எல்லாந் தெரிந்துவிட்டபடி யால் அநியாயமாய்க் குற்றமற்ற ஒருவனைத் தாங்கள் கழுவி லேற்றுததற்குச் சந்தோஷமடைந்து வசந்தசேனையைப் பார்த்து "அம்மணி உமது நாதன் நூறு வருஷம் பிழைத்திருப்பார். இனி நீர் கண்ணீர் வடிக்கவேண்டாம்" என்றார்கள். சகாரன் வசந்தசேனையைக் கண்டதும் "ஐயையோ! இந்த முண்டை இன்னும் பிழைத்திருக் கிறாள். இனி இங்கிருந்தால் நமது பிராணன்போய்விடும்" என்று ஓடிவிட்டான். சண்டாளர்களோ நமக்கு வசந்த சேனையைக் கொன்றவனைக் கொல்லும்படி உத்திரவாகை யால் நாம் சகாரனைப் பிடித்துவந்து குற்றமற்ற சாருதத் தனுக்கு விதிக்கப்பட்ட கழுவிலேற்றுவோம் என்று அவ னைத் தொடர்ந்தார்கள்.

இப்படித் தான் கழுவிலேறுங் காலத்தில் தன்னை வந்து விடுவித்த வசந்தசேனையைப் பார்த்துச் சாருதத் தன் தன் கண்கள் கண்டபொருளை நம்பாதவனாய் "இவள் என்ன வசந்தசேனைதானா: அவள் இறந்து விட்டாளே; என்னைக் காப்பாற்றும்பொருட்டு சுவர்க்கத்திலிருந்து மறு படியும் வந்தாளா; அல்லது வசந்தசேனை வடிவுள்ள வேறு பெண்ணா" என்று தன் காலில் விழுந்த பெண்ணை மறுபடியும் மறுபடியும் பார்த்தான். உடனே அவள் "எந்தப் பெண்ணைக் கொன்றதற்காகத் தங்களைக் கழுவேற்

...போனார்களோ அந்தத் துக்கத்துக்குக் காரண...த வசந்தசேனை நான்" என்றாள். மறுபடியுஞ் சாருதத்தன் "நீ நிஜமாய் வசந்தசேனைதானா" என அதற்கு அவள் கண்ணீர்வடித்து "அவளே தான் நான்" என்றாள். சாருதத்தன் உடனே "அடி வசந்தசேனை உனக்காகவே நான் என் பிராணனைவிட நிச்சயித்திருந்தேன்; உன்னாலேயே மறுபடியும் உயிர்பெற்றேன்: நற்சேர்க்கையின் குணம் இதே. செத்தவர்களையும் நற்சேர்க்கை பிழைப்பிக்கும்: நான் கழுவேறுவதற்குப் பூசிக்கொண்ட ரத்த சந்தனமுங் கழுத்திலணிந்த மாலையும் எனது சாகு கொட்டும் இப்பொழுது உன்னால் மணப்பந்தலில் பூசப்படும் சந்தனமும், மணப்பந்தலில் போடப்படும் மாலையும், மணப்பந்தலில் அடிக்கப்படும் வாத்தியமுமாய் விட்டனவே" என்று ஆனந்தக்கண்ணீர் வடித்தான். பிறகு அவளுடன் கூடவந்த சன்னியாசியைப் பார்த்து "இவர் யார்" என்று கேட்க அதற்கு அவன், தான் முதலில் அவரிடமே ஸம்வாககனாக இருந்து பிறகு சூதிலிறங்கி, வசந்தசேனையால் இரட்சிக்கப்பட்டு சன்னியாசம் வாங்கிக்கொண்டதாகச் சொன்னான்.

பாலகனுடைய கொடுங்கோன்மை பொறுக்கக்கூடாமல் அநேகம் பெயர்கள் சேர்ந்து ஆரியகன் என்ற ஒரு இடையனை அரசாகப்பண்ண முயன்றதாக முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா? சாருதத்தனுக்கு இவ்விதமான தண்டனை விதிக்கப்பட்டபிறகு பாலகனுடைய உயிர் தப்பினால் அது ஈசுவரருக்குப் பொறுக்குமா? அன்று அந்தப் பொல்லாத பாவி ஒரு எக்கியசாலைக்குப் போயிருந்தபொழுது சர்பிலகன் அவரைக் கொன்று ராச்

சியத்தில் ஆரியகனைப் பட்டாபிஷேகஞ் ெ
ஆரியகன் தான் பட்டத்திற்கு வந்தவுடன்
இன்று காலையில் விடுவித்த சாருதத்தனைப் பாலகன் கழுவிலேற்ற கட்டளை இட்டானும். முதலில் அவரை விடுவித்துவா" என்று சர்பிலகனை அனுப்பியிருந்தான். அந்தச் சர்பிலகன் சாருதத்தனையும் வசந்தசேனையையும் உயிருடன் காண்போமா என்று நினைத்துக்கொண்டு வந்து அவர்களிருவர்களும் உயிருடனிருக்கக் கண்டு ஆனந்தக்கடலில் மூழ்கி ஆரிய சாருதத்தர் காலில் வந்து விழுந்தான். "நீ யாரப்பா" என்று சாருதத்தன் கேட்க "சுவாமி தங்கள் வீட்டில் முதலில் கன்னமிட்டு இந்த அம்மணி நகைகளைக் கொள்ளை இட்ட பாவி நான்" என அதற்கு "இந்த சந்தோஷ காலத்தில் அப்படி உன்னை நீ நிந்தித்துக்கொள்ளாதே" என்று அவனை சாருதத்தன் கட்டி அணைத்தான். சர்பிலகன் உடனே ஆரியகன் பட்டத்திற்கு வந்ததையும் பாலகன் போய்விட்டதையுஞ் சொல்லி "தாங்கள் அவருக்குச் செய்த உபகாரத்திற்காக வேணு நதிக்கரையில் குசாவதி என்ற ராச்சியத்தைத் தங்களுக்குக் கொடுத்ததாகத் தெரிவிக்கச் சொன்னர்" என்றான்.

இப்படியே தான் காலமே செய்த உபகாரத்திற்காகத் தனக்கு ஆரியகன் ராச்சிய மொன்று கொடுத்ததைக் கண்டு சாருதத்தன் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையில் சாருதத்தனைக் கழுவேற்ற வந்த பிறகு சகாரனைத் தொடர்ந்து சென்ற சண்டாளர்கள் சகாரனைப் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். அவனைக் கண்டதும் வசந்தசேனை சாருதத்தன் கழுத்திலிருந்த சாவு

...டுத்து அவன் கழுத்தில் வீசி எறிந்தாள். அதற்கு அவன் " இனி நான் உன்னை ஒருநாளும் கொல்லுகிறதில்லை. என்னைப் பிழைப்பித்துவிடு" என்று கெஞ்சினன். " இவனைமட்டும் கொல்லாமல் விடவேண்டாம்" என்று அவள் உத்திரவிட்டாள். மோசம் போயிற்றென்றெண்ணி அவன் சாருதத்தன் காலில் விழுந்து "நான் செய்ததை எல்லாம் பொறுத்து என்னைக் காப்பாற்ற வேண்டும். நானினி பொய்ப் பிராது செய்கிறதே இல்லை" என்றான். சாருதத்தனும் சர்பிலகனைப் பார்த்து "மகா ராஜா ஆரியகர் நான் சொல்லுகிறபடி செய்வாரா" என "அதற்கு என்ன ஆக்ஷேபனை" என்று சர்பிலகன் சொன்னன். "அப்படியானல் உடனே இவனை விட்டுவிடவேண்டும்" என்று சாருதத்தன் வேண்ட அப்பொழுது மந்திரி சர்பிலகனேயானபடியால் உடனே சகாரனை விட்டுவிட்டான். இப்படி இவர்களிருக்கும்பொழுது சந்தனகன் என்பவன் சாருதத்தனிட மோடிவந்து "தூதிகை என்ற தங்கள் பத்தினி தீவளர்த்தித் தன் பிராணனை அதில் விட எத்தனித்துக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் உயிருடனிருப்பதாக என்ன சொன்ன போதிலும் கேட்கமாட்டேனென்கிறாள்" என உடனே எல்லாரும் புறப்பட்டு தூதிகை தீ வளர்த்திருக்கும் இடத்தைநோக்கி ஓடினார்கள். அங்கு அவள் தீக்குதிக்கத் தயாராக நிற்பதையும் அவள் குழந்தை ரோஹசேனன் அவள் முந்தாணியைக் கைப்பற்றி அழுவதையும் மைத்திரேயன் துக்கிப்பதையுங் கண்டு எல்லாரும் மனதுருகவே சாருதத்தன் வேகமாகத் தனது பத்தினியினிடம் வந்து பிழைத்திருப்பதாகக் காட்டிக்கொண்டான்.

புருஷனைக் கண்டவுடன் தூதிகைக்கு வந்த திற்கு அளவுமுண்டோ.

மைத்திரேயன் "எனது யஜமான் இன்னும் பிழைத்திருக்கிறாரா" என்று காலில் விழுந்தான். "அப்பா" என்று ரோஹசேனன் மேல் விழுந்து கட்டினான்.

இப்படித் தனது நல்ல குணங்களால் சாருதத்தன் தனக்கு வந்த ஆபத்தெல்லாம் நீங்கி பெண்சாதி பிள்ளை சகிதம் வெகுகாலங் தனது நேசனாகிய ஆரியகனால் கொடுக்கப்பட்ட குசாவதி என்னும் ராச்சியத்தில் தனது தரித்திரமும் நீங்கி வாழ்ந்துவந்தான்.

ஸம்வாககனை பௌத்த சன்னியாசிக்கு எல்லா பௌத்த மடங்களுக்கும் மேலான அதிகாரங்கொடுக்க சாருதத்தன் ஆரியகனை வேண்டிக்கொண்டான். அவனு மப்படியே செய்தான்.

சகாரனிருந்த பெரிய சமஸ்தானிக வேலைக்கு ஆரியகன் ஒடுங்கா லுபகாரஞ் செய்த சந்தனகன் நியமிக்கப்பட்டான்.

Madras : The Guardian Press, Mount Road

# குமார ஸம்பவம்

## பண்டித நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்டது

**6 சித்திரப்படங்களடங்கியது. விலை அணு 12**

தம்மினும் கல்வி கேள்விகளில் ஏற்றங்கொண்ட தன் மனையாளுக்கு நாணி அம்பிகையின் அருள்பெற்ற காளிதாஸர் என்னும் பெயர்புனைந்த மகாகவியால் எழுதப்பெற்றதாகும் குமார ஸம்பவம் என்னும் இந்நூல். இதை வடமொழியிலிருந்து தமிழில் எழுதியவர் காலஞ்சென்ற ஸ்ரீமான் பண்டித ச. ம. நடேச சாஸ்திரியாராவர். காடுமுரடாய் எழுதப்படும் சிற்சில புஸ்தகங்களைப்போலல்லாமல் சகல ஜனங்களும் ஆநந்தத்துடன் படித்து அறிந்துகொள்ளும்படியான தெளிவான தமிழ் நடையில் எழுதிவைத்த ஸ்ரீமான் சாஸ்திரியாரவர்கள் தமிழ் உலகத்தவர்க்குப் புத்தி புகட்டும்படியான 'நாவல்' என்ற கற்பனாலங்காரம் பொருந்திய கதைகளை எழுதி விடுவித்தது யாவரும் உணர்ந்ததேயாயினும், அன்னார் தாம் எடுத்த இம்முயற்சி அச்சிட்டுப் பூர்ணமாய் வெளிவருவதன் முன்பாக இம்மண்ணுலகைவிட்டு விலகும்படி நேர்ந்ததே யென் மனம் வெதும்பி முகம்வாடி மெய்சோர்ந்து நிற்கின்றோம். ஷண்முகன் என்றும், ஷடானனன் என்றும், வடிவேலனென்றும் பல நாமங்கள் கொண்டு நாம் தொழும் குமாரக் கடவுளின் திருவவதாரத்தைக் குறித்துச் சொல்லும் இந்நூல் தமிழறிந்தார் ஒவ்வொருவராலும் இது அவசியம் படிக்கத் தகுந்தது. பெரிய எழுத்துக்களில் வெண்மைக் காகிதத்தில் கார்டியன் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டிருக்கும் இதை நமது நண்பர்கள் பரிவுடன் வாங்கி வாசித்து நற்பயனடைவாராக.—இந்துநேசன்.

இந்தப் புஸ்தகம் பேர்பெற்ற ஆசிரியராகிய காலஞ்சென்ற பண்டிதர் எஸ். எம். நடேச சாஸ்திரியார் எழுதியது. வடமொழிக் கவிகளில் மிக மேன்மை பெற்றவராகிய காளிதாஸர் எழுதிய குமார ஸம்பவத்தில் முதல் எழு ஸர்க்கத்தின் மொழிபெயர்ப்பாகும். இதில் உமாதேவி உற்பவம் முதல் அவருடைய விவாகம் முடிய சொல்லப்பட்டிருக்கின்றன. சாஸ்த்ரியார் தாம் எழுதிய மற்ற புஸ்தகங்களைப்போலவே இந்த நூலையும் ஸுலபமான நடையில் எழுதியுள்ளார். ஸதாரநாட்டில் ஆந்து நிலத்தின் அதிபதியாகிய பாலஸாகிப் பண்டித ப்ரதிநிதி அவர்களால் வரையப்பட்ட ஆறு அழகான சித்ரப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பெதர் வெய்ட் பேபர் என்னும் உயர்ந்த கடிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகம் வாசிக்க இனிமையாயிருக்கிறது. யாவரும் வாசித்து ஆனந்திக்கலாம்.—பிழைக்கும் வழி.

---

ஜி. ஸி. லோகநாதம் பிரதர்ஸ், மவுண்ட் ரோட், சென்னை.

**Approved by the Director of Public Instruction, Madras for use in recognised schools**

# DINADAYALU

## FOURTH EDITION—ANNAS SIX

*Used in many Schools as Reader and prescribed as a text book for the Preliminary Examination for Teacher's Certificates* 1913

Written in a homely yet chaste style of Tamil.—*Madras Mail.*

The first attempt of the kind in the realms of fiction. The book is written in an easy and popular Tamil and is devoid of pedantry, which often defeats the aim of such works.—*The Madras Times.*

An Educationist writes to us : In a charming style, resembling that of Miss Austen in English, the novel portrays real life, and the incidents related are of every-day occurrence in Hindu homes. Written in a language natural, simple, perfectly idiomatic and absolutely free from all pedantry, and such as the people ordinarily think and speak in iheir homes. The book has also a rich abundance of wit, humour, pathos and instructive and edifying reflection.—*The Hindu.*

The hero of the story is an ideal hero. An obedient son of a doting father, an orphan brought up by his kind relatives, an honest public servant, discharging his duties with sincere devotion to his work and respect to his superiors, a kind relation sincerely attached to all the members of his family, a stern moralist never excusing mistakes, a patient sufferer among several kinds of misfortunes in his public and private life, a cosmopolitan at heart, kind to every one and respected by all, his manifold virtues relieve him of all troubles and he came out all the more successful in life notwithstanding his troubles. The types held out are worthy of imitation, and we recommend this neat interesting volume to every one of our countrymen, women and children. The great charm of the book is, in the first place, its thoroughly bright and healthy tone, and in the second, the excellence of its dialogue, which brings out the characters capitally, as dialogue ought to do.—*The Hindu.*

It is further a wonderfully interesting and ripe piece of work written in a pleasant, clear and easy style. Each chapter is prefaced with a motto.—*The Madras Standard.*

There is a human interest and feeling passing through the novel, which accounts, in our opinion, for its success. Some incidents described are quite realistic—*The Madras Christian College Magazine.*

The author's intention is not simply to afford recreation and amusement but also to elevate the minds of his readers........the author's characteristically graceful style.—*The Arya.*

G. C. LOGANADHAM BROS.,
100, Mount Road, MADRAS.

183854

# S. Meera Sahib & Bros.,

**Buckingham & Carnatic Mills**
**PIECE-GOODS MERCHANTS,**

எஸ். மீருசாயபு அண்டு பிரதர்ஸ்,

பக்கிங்காம் அண்டு கர்ணுடிக் மில்
பீஸ் கூட்ஸ் வியாபாரிகள்.

**52 & 53, Evening Bazaar Road,**

*Park Town Madras.*

---

**Wholesale and Retail**
**Piece-goods Merchants**
**to suit all tastes.**

---

**PRICES MODERATE.**

# M. Abdul Azeez Sahib

**Buckingham & Carnatic Mills**
**PIECE-GOODS MERCHANT.**

**எம். அப்துல் அஸீஸ் சாயிப்**

பக்கிங்காம் அண்டு கர்னாடிக் மில்
பீஸ் கூட்ஸ் வியாபாரி

No. 51, Nainiappa Naick Street,

**Parktown Madras.**

---

## Wholesale and Retail Piece-goods.

## Reasonable rates to traders.

To Buy a good
watch, Gold,
Rolled-gold
or Silver
go to
Ratna Watch Co.,
93, China Bazaar Road,
MADRAS.

# M.S. Gulam Maboob Sahib

**BUCKINGHAM & CARNATIC MILLS**
**PIECE-GOODS MERCHANT,**

எம். எஸ். குலாம் மாபூப் சாயப்

பக்கிங்காம் கர்ணடிக் மில்
பீஸ் கூட்ஸ் வியாபாரி,

## 20-21, Evening Bazaar Road,

## PARK TOWN MADRAS.

---

முதல்தரமான பீஸ் கூட்ஸ்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

மொத்தமாகவும் சில்லரையாக

வும் விற்கப்படும்.

நேர்த்தியான பனாரீஸ்,
பாங்களூர், காஞ்சிபுரம் சரி
கைப் பட்டு சேலைகள்,
அங்கவஸ்திரங்கள், புது
புது மாதிரியான ஜவுளி
தினுசுகள் நம்பிக்கையான
தும் விலை சகாயமான
தும் எவ்விடத்தில்
அகப்படும் என்றால்:

கரு. க. முருகேச செட்டி,
ஜவுளி மளிகை வியாபாரம்,
257, தேவராஜ முதலி தெருவு.
பார்க் டவுன், மதராஸ்.

# ஜிண்டான் கீர்த்தி பெற்றது.




ஜிண்டான் மாத்திரையை எந்த விதத்திலும் எப்பொழுதும் உட்கொள்ளலாம். டாக்டர்களினால் அங்கீகரிக்கப் பெற்றது. வியாதி வராமல் தடுக்கக்கூடிய ஸஞ்சீவி. வெற்றிலைபாக்கோடும் சாதாரணமாகவும் இதை உபயோகிப்பதினால் உண்டாகும் குணத்தையும், அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய வாசனையையும் அனுபவித்தால் தான் தெரியும்!

நடப்பு விலை விவரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | மாத்திரைகள் உள்ள பாக்கெட் ... | 0 | 1 | 0 |
| 40 | ,, ,, ... | 0 | 2 | 0 |
| 65 | மாத்திரைகள் அடங்கி அழகிய டப்பா ... | 0 | 4 | 0 |
| 100 | மாத்திரைகள் மட்டும் பாக்கெட் ... | 0 | 4 | 0 |
| 260 | மாத்திரைகள் அழகிய டப்பா, முகம் பார்க்கும் கண்ணாடியுடன் ... | 1 | 0 | 0 |
| 1000 | மாத்திரைகள் பாக்கெட் ... | 2 | 0 | 0 |

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:— (Head office.)

எஸ். வைத்தியா அண்டு கம்பெனி,

77, தேவராஜமுதலி தெரு, பார்க் டவுன், மதராஸ்.

தந்தி விலாசம்:—VYDIACO" Madras.

கீழ்க்கண்ட எங்கள் பிராஞ்சுகளிலும் கிடைக்கும்:—

(1) சைனுக்கடைத் தெரு, திருச்சி, கோட்டை,

(2) 68, அவினியு ரோட், பெங்களூர்ஸிடி.

(3) 75, செட்டித்தெரு, கொழும்பு.

☞ எங்களிடத்தில் மேலானமுறையில் தயாரிக்கப்பெற்ற சகல குடும்ப ஔஷதங்களும், காலரா, ப்ளேக், இன்ப்ளுயென்சா முதலிய கொடிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்துகளும், பேடெண்டுகளும், டாய்லட் வாசனை தினுசுகளும், உயர்ந்த டானிக்குகளும், லவண்டர், ஓடிக்கொலோன், மேலான பல்பொடி, கூந்தல் தைலங்களும், பித்தளை மெழுகுவத்தி ஸ்டாண்டுகளும், இங்கோ எஸ்ஸென்ஸ் என்னும் உயர்ந்த மசி சத்துவமும், இன்னும் பலபல சுதேசிய சாமான்களும் கிடைக்கும். விலை ஜாப்தா விவரம் எழுதிக்கேட்பவர்களுக்கு அனுப்புகிறோம். போலி மருந்துகளல்ல, உண்மையானவைகள் என்பதை ஒரு தடவையாவது அனுபவித்தால் தான் நன்குவிளங்கும். கொசு, மூட்டைப்பூச்சிக்கு மருந்தும் கிடைக்கும். கதர் வஸ்திரங்கள், எல்லாரகத்திலும் ஏராளமாய் கிடைக்கும்.